ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] பிரபவ ஆண்டு தைத்திங்கள் 10-2-88 [இதழ்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
காஞ்சி ஸ்ரீகாமகோடிபீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
தருமை ஆதீனத்திற்கு எழுந்தருளியபோது

சிறப்பான வரவேற்பளித்து
அகமும் முகமும் மலர அளவளாவி வழியனுப்புங்காட்சி.
29—1—88

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

சிற்றின்பம் பேரின்பம்
சீவகுண மென்றனை நீ
உற்றின் பிரண்டும்
உணர்ந்திலையோ — சிற்றின்பம்
நாடிற் கருமபலம்
நாதனுருப் பேரின்பம்
நீடிப் படிகம்போல் நீ.

— முத்திநிச்சயம் 5

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-2-88 | இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	நாட்டின் நிலைபற்றிச் சிந்திப்போம்! ...	113
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரை ...	117
3	கல்வி யுகத்திற்குத் தமிழ் (2) ...	121
4	தருமை ஆதீனத்தில் சிறப்பான வரவேற்பு	127
5	ஞான வேள்வி ...	129
6	அபிராமி அந்தாதி ...	130
7	போதமும் சித்தியும் ...	133
8	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் ...	138
9	கடிதங்கள் ...	143
10	ஏயர்கோன் கலிக்காமர்	145
11	செய்திகள் ...	150
12	எதிர்காலம் ...	155
13	Gnanasambandam Magazine ...	160
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-1. ...	161

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 3

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரபவ தை 10—2—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

நாட்டின் நிலை பற்றிச் சிந்திப்போம்

காரணங்கள் ?

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு அஹிம்சா போராட்டத்திற்குப் பின்னர் கி. பி. 1947இல் நம்நாடு விடுதலை பெற்றது. தன்னல மற்ற வீரத்தியாகிகள் விடுதலைக்குப்பிறகு நாடு மேலும் செழித்து ஓங்கும் எனக் கனவு கண்டனர். நமக்கு நாமே சட்டங்கள் உருவாக்கிக்கொண்டு கி. பி. 1950இல் குடியரசு ஆட்சி அமைத் தோம். நம்மிடமிருந்து பிரிந்துபோன பாகிஸ்தான் உருவான காலந்தொடங்கி இன்றுவரை பதட்டம் நிறைந்தே காணப் படுகிறது. இந்தியநாடு குடியரசானபிறகு முதல் இருபது ஆண்டு களில் நீள்நோக்குடன் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி நம்பிக்கையுடன் முன்னேறியது. அடுத்த இருபது ஆண்டுகளில், வளர்ச்சியில் தேக்கமும், பல்வேறு துறைகளில் பின்னடைவும் உருவாகிவிட்டன. இத்தகுநிலை உருவாகக் காரணங்கள் யாவை?

முதற் காரணம் :

அன்று காந்தியடிகளைப் போன்ற கடமை உணர்ந்த சான்றோர்கள் பலர் நமக்கு வாய்த்தனர். நாட்டிற்கு வந்த

நலிவுகளையெல்லாம் தாங்களே ஏற்றனர். நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சேதம் அதிகமில்லாமல் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தனர். அந்நற்செயலே நமக்குப் பொறுப்பின்மையை வளர்த்து விட்டது. நம்மில் பலரும் அடி உதைபட்டு நொண்டி முடமாகி அதிகச் சேதம் அடைந்திருந்தால் நமக்கும் பொறுப்புணர்ச்சியும் நாட்டுப் பற்றும் இருந்திருக்கும். உதாரணத்திற்கு ஜப்பானைப் பார்ப்போம். எதிரியின் குண்டு வீச்சினால் நொண்டி முடமான மக்களுடன் சேதம் மிக அடைந்த ஜப்பான், சுதந்திரமடைந்த அன்று பாலைவனமாகத்தான் காட்சியளித்தது. இன்றோ அது சோலைவனமாக அல்லவா காட்சியளிக்கிறது? மேலும் எதிரி நாடான அமெரிக்காவுடன் போட்டி போட்டல்லவா வளர்கிறது? துன்பப்படாமல் துயர் உறாமல் சுதந்திரம் பெற்றோம் அன்று. நம்மைத் துன்பமும் துயரும் தொடர்கிறது இன்று.

இரண்டாவது காரணம் :

பொருளாதார வளர்ச்சிவேகத்தை விட, மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போனது. பிரிவுபடாத இந்தியாவின் 33 கோடி மக்களில், பாகிஸ்தான் பகுதியில் பிரிந்த 5 கோடி மக்கள் நீங்கலாக, விடுதலை பெற்ற போது இருந்த 28 கோடி, இன்று மேலும் இரு மடங்கு வளர்ந்து 78 கோடியாக உயர்ந்துள்ளது. உற்பத்திக்கும், பங்கீட்டுக்கும் இடைப்பட்ட சமனின்மை, மக்களிடையே தனிமனித ஒழுக்கம் குறையக் காரணமாயிற்று. இறையருள் நம் பக்கமின்மையையே காட்டுகிறது இது. இறை வழிபாட்டையும், இறைவன் திருக்கோயில்களையும் போற்றுவது அநாகரிகம் என்று கருதிவிட்டோம், மதச்சார்பற்ற அரசு என்ற பெயரால்!

மூன்றாவது காரணம் :

மத்திய – மாநில ஆட்சி மாற்றங்களாலும், இவற்றிடையே நல்லுறவின்மையாலும் உருவானது; விடுதலைக்குப்பின் மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே அரசியல்கட்சி ஆட்சிபுரிந்து ஒரே நாடு, ஒரே உணர்வு, மக்கள் என்ற நினைவு ஆட்சியாளர்களிடையே நிலவியிருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நிலைமாறியது. தியாகமும், நாட்டுப்பற்றும் எல்லாரிடமும் குறையலாயின. மாநில அளவிலான கட்சிகள் தலை எடுத்தன. அவை ஆட்சியையும் கைப்பற்றின. மத்தியில் ஒரு கட்சி; மாநிலத்தில் ஒரு கட்சி என்ற நிலை உருவானபோது, இருதரப்பிலேயும் இணக்கம் குறையலாயிற்று. இவை மக்கள் நலம், நாட்டு வளர்ச்சி என்பனவற்றை எல்லாம் புறக்கணித்துத் தத்தமதுகட்சி ஆட்சிகளை நிலைநிறுத்திக்கொள்வதிலேயே அதிக கவனம் செலுத்தின.

சொல்லும் செயலும் ஒவ்வாமை :

ஒரே நாடு என்ற உணர்வு குறைந்த போது மக்கள் மத்தியில் பிரிவினை வாதங்களும், போராட்ட உணர்வுகளும் விதைக்கப் பட்டன. மக்களும் தேசம் பெரிது என நினையாது, தங்கள் மாநிலங்களையே நாடு எனக் கருதினர். இந்த உணர்வுகளைப் பயன் படுத்திக் கொண்டு வளர்ந்த அரசியல் கட்சிகள், மத்திய அரசுடன் மோதல் போக்கையே கடைப்பிடித்தன. மத்தியில் உள்ளவர்களும் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டனர். இத்தகு போக்கால் உருவான இழப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையைக் கூறலாம். ஒரு நேரத்தில் வேண்டுமென்றே தீர்வு காணாது விடப்பட்ட இப்பிரச்சனையை, இன்று தொடர்புடையவர்கள் மனப்பூர்வமாகத் தீர்த்துவைக்க முயன்றாலும், நிறைவேறுமாஎன்பது ஐயத்திற்குரியதாய்விட்டது. பொதுவாக நல்லெண்ணம் குறைந்து, பழிவாங்கும் மனநிலை உருப்பெற்றுவிட்டது. ஜனநாயகம் பெயரளவில்தான் பேசப்படு கிறது. நடப்பதெல்லாம் நயவஞ்சக ஆட்சியாக மாறிவிட்டது.

நன்றி மறந்தோம் :

தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிந்த தமிழ் நாடு, மாநில அளவிலான கட்சிகளிடமே கடந்த இருபது ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. இருந்தபோதிலும் இவர்கள் திறமையும் இராஜ தந்திரமுங் கொண்டு போதிய முன்னேற்றம் காணவில்லை. இன்று தலை குனிய வைக்கும் நிகழ்வுகளுக்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருந்துவருகிறது தமிழ்நாடு. வீழ்ச்சிகளுக்குக் காரணங் கள் பல. பாரத தேசமெங்கணும் தேசபக்தியும், தெய்வபக்தியும் இல்லாமையால் ஏறத்தாழ ஒரு நாத்திக அரசாகவே ஆட்சி நிலவியது. அறப்பண்புகள் வேண்டிய அளவு புதைக்கப்பட்டன. இறைவனின் பெயர் கூறக் கூட மக்கள் அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டது. சமயச் சார்பற்ற நாடு என்பதன் பொருள் திரித்துக் கூறப்பட்டது. தெய்வ சிந்தனையும், அதன் வழி உருவாகும் அறப் பண்புகளும் சிரழிந்தன. இந்த அவலமே நடந்து முடிந்த பதட்டங் கள் பலவற்றுக்கும் அடித்தளம் என்பதை மக்கள் தாமதமாக உணரத் தொடங்கியுள்ளனர். பிரார்த்தனை செய்து வாங்கிய சுதந்தர நாட்டில் பிரார்த்தனைக்குரிய கடவுளை மறந்தும், புறக் கணித்தும் வருவதென்றால் அது நன்றி கொன்ற செயலாகும் அல்லவா? நன்றி மறந்த செயலுக்குத் தண்டனைகளே நாம் இப்போது கண்டுவருகிறோம், அனுபவித்தும் வருகிறோம்.

உழைப்பை மறந்தோம் :

நமது வீழ்ச்சிக்குத் தனிமனித உழைப்பு நாளும் குறைந்து வருவதும் ஒரு காரணமே. மிகக் கற்றவர் முதல் பாமரர் வரை

உழைக்காது பொறுப்பின்றி உயர நினைத்தனர். நன்மை போல் தீமைகள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டன. அறச்சொத்துக்களைக் கூறிட்டனர். பிறர்பொருளைக் கைப்பற்றத் தூபம்இட்டனர். உழுபவர்க்கே நிலம் என்றனர். உழவர்களைச் சலுகைச் சட்டங்களால் சோம்பேறிகளாக்கினர். வருவாயில், ஒரு பகுதியைக்கூட செலுத்தாதிருக்க மறைமுகமாக உதவினர். பாமர மக்களும் ஆசைகளுக்கு அடிமைப்பட்டனர். இருவரின் நோக்கங்களுமே தவறாக அமைந்தன. யாரும் மகிழ்ந்து வாழவில்லை. இன்று தவறு உணரப்பட்டாலும், திருத்திக்கொள்ளும் வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. ஜப்பான் தேச மக்களின் சுறுசுறுப்பும், உழைப்பும், பொறுப்புணர்ச்சியும், கடமையாற்றும் பண்பும், கொரியாதேச மக்களின் விறுவிறுப்பான செயல் திறனும் நம்நாட்டு வளர்ச்சிக்குப் பின்பற்றத்தக்கனவாயுள்ளன.

மூத்திறத்தார் பொறுப்பு :

எல்லாம் நடந்து முடிந்த பிறகு மீண்டும் தேர்தல் வருகிறது. குடியாட்சியில் மக்கள், ஆட்சியாளர், அதிகாரிகள் என முத்திறத்தார் பங்கும் பெரிது. தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பது மக்கள்கடன். மக்கள் நலன் குறித்துச் செயலாற்றுவது ஆட்சியாளர் பொறுப்பு. ஆட்சியாளர் வழிகாட்ட மக்கள் நலங்களை விரைந்து நிறைவேற்றும் கடமையுடையோர் அதிகாரிகள். இன்று முத்திறத்தினருமே கடமை உணர்ந்து செயற்படவில்லை. எனவே, வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் எல்லாருமே பொறுப்பேற்க வேண்டும்.

உடலும் உறுப்பும் :

நாடு ஒரே நாடாக உணரப்பட வேண்டும். ஓர் உடலில் உள்ள அங்கங்கள் இணைந்து செயல்படுவது போல மத்தியிலும் மாநிலத்திலும் ஒருமை நிலவ வேண்டும். உடலில் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை வேறுபாடின்றிக் குருதியோட்டம் நிகழ்வது போல் தேசிய நீரோட்டமும் எவ்வகை வேறுபாடும் இன்றி நிகழவேண்டும். மக்கள் பேதங்களும், பேராசை உணர்வும் அற்றவர்களாக வளர வேண்டும். பாரம்பரியப் பெருமையும், பக்தியும், பண்பாடும் மிக்க தமிழ்நாட்டில் நல்லாட்சியும், நல்லறமும் மீண்டும் மலர வேண்டும். எல்லாம் வல்ல சிவபரம் பொருள் மக்களுக்கு நல்லவர்களையேதேர்ந்தெடுக்கும் ஆற்றலையும், ஆட்சியாளர்களுக்கு அறப்பண்புகளோடு ஆட்சிபுரியும் திறனையும் அதிகாரிகளுக்கு நேர்மையோடு செயல்படும் நிலையையும் வழங்க வேண்டும் என்று ஞானசம்பந்தம் பிரார்த்திக்கிறது.

பிரார்த்தனையால் சுதந்திரம் அடைந்தோம் அன்று!
பிரார்த்தனையால் சுகம் அடைவோம் இன்று!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காஞ்சி, ஸ்ரீ காமகோடி பீடாதிபதி

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

தருமை ஆதீனத் திருமடத்திற்கு எழுந்தருளிய பொழுது நடைபெற்ற வரவேற்பு விழாவில் வழங்கிய

அருளுரை

29—1—1988

பூமித் தாய் :

பொதுவாக இந்நிலவுலகத்தையும், சிறப்பாக நம் பாரத தேசத்தையும் வலம் வருதல் வழிபாட்டு நெறியில் சிறந்ததொரு முறையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம். இந்த பூமி, நம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் விளைவித்துக் கொடுக்கிறது. அப்பொருள்களை எல்லாம் பெற்று அனுபவித்து அவற்றால் அனைவரும் வளர்ந்து வருகின்றோம். எனவே நம்மை இடையறாது காத்து வருகின்ற பூமாதேவியைப் பால் நினைந்தூட்டும் தாய் எனவே கருதிப் போற்றி வருகின்றோம். இத்தகு நலம்தரும் தாயை வலம் வந்து வழிபடல் சிறந்தது எனக் கருதப்படுகிறது. இன்று இங்கு விஜயம் செய்துள்ள காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இப்பாரத தேசத்தைக் காஷ்மீர் நீங்கலாக ஒரு முறை வலம் வந்த மாட்சியுடையவர்கள். அக்காஷ்மீர் யாத்திரையையும் விரைவில் முடிக்க இருக்கிறார்கள்.

கோமாதா :

இங்ஙனம் அகன்ற நிலையிலுள்ள உலகத்தை-பாரத தேசத்தை வலம்வந்து வழிபட இயலாதவர்கள் இருந்த இடத்திலிருந்து வழிபட வாய்ப்பாக ஒருநெறியையும் கூறியுள்ளனர் நம் முன்னோர். அது பசுவை வலம் வந்து வழிபடல் ஆகும். பூமியைப் போலவே பசுவும் உயிர்கள் வாழ, பல பொருள்களை அளித்து வருகிறது. பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்னும் ஐந்து பொருள்களில் முதல் மூன்றும் உயிர்களுக்கு உண்ணும் பொருள்களாகவும் பின்னிரண்டும் வாழும் இடத்தைத் தூய்மை செய்யும் பொருள்களாகவும்

விளங்குவதோடு ஐந்தும் இறைவனுக்குத் திருமஞ்சன மாட்டும் பொருள்களாகவும் பயன்படும் சிறப்புமிக்கன. அதனாலேயே இப் பொருள்களை அளித்துக் காக்கும் இப்பசுவினைத் தாய் என வைத்துக் 'கோமாதா' என்று முன்னோர்கள் போற்றி வந்தனர்.

தேவர்கள் குடிகொண்ட தெய்வீக வடிவம் :

மேலும் இப்பசுவின் உடம்பில் அனைத்துத் தேவதைகளும் வாழ்கின்றன என்பது சமய நம்பிக்கை. பசுவின் நான்கு கால்களும் நான்கு வேதங்களாகவும், கண்கள் இரண்டும் சூரிய சந்திரர்களாகவும், அதன் உடம்பு முழுமையும் தெய்வவடிவமாகவும், அதன்வால் நமசிவாயமாகவும், கொம்புகள் இரண்டும் நான்முகன், திருமாலாகவும், அதனிடத்துக் கிடைக்கின்ற சாணம் சிவம் என்பதாகவும் கொள்ளவேண்டும் என்று ஒரு பழம் பாடல் கூறுகின்றது.

அப்பாடல்,

"நாலுகால் நாலு வேதம் நயனம் ஓர் இரவி திங்கள்
மேலெலாம் தெய்வரூபம் வீசும்வால் நமசிவாயம்
ஆலமாம் கொம்பு இரண்டும் அரி அயனேயுமாகும்
சாலவே பசுவின் சாணம் சிவம் என்றும் செப்பலாமே"

என்பதாகும். பசுவிடத்து மேலும் ஒரு சிறப்பினையும் கூறுவார்கள். பசு கன்று ஈனும்போது, கன்றின் முகம் வெளியில் தோன்றும் நேரத்தில் தூப தீபங்கள் காட்டிப் புஷ்பாஞ்சலியுடன் தேங்காய் பழம் தாம்பூலம் நிவேதித்துக் கற்பூரத் தட்டுடன் சுற்றி வலம் வந்தால், இந்த பூமி முழுமையும் சுற்றி வலம் வந்த புண்ணியமும் பயனும் கிட்டும் என்பது சமய சாத்திரங்கள் கூறும் உண்மை. இதற்குக் காரணம், கன்று ஈனும் பொழுது பசுவின் முன்புறம் அதன் முகமும் பின்புறம் கன்றின் முகமும் என இரு முகங்களுடன் ஒரு நேரத்தில் காணும் காட்சி கிடைப்பது ஆகும்.

இரு நிலை வழிபாடு :

உலகத்தைச் சுற்றி வரும் அகன்ற வழிபாடும், பசுவை வலம் வரும் நுட்ப வழிபாடும் இறைவனை வழிபடும் இருவகையின வாம். காலையில் விசுவரூப தரிசனம் செய்வதும் இரவில் அர்த்தஜாம வழிபாடு செய்வதும் அவ் இருவகைகளாகும். இவை தத்துவங்களை உள்ளடக்கியன. விசுவரூபதரிசனம், இறைவனிடத்து, உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் கண்டு - அகன்ற நிலையில் மகத்துக்கு மகத்தாக விளங்கும் இறைவனின் திருவுருவைத் தரிசிப்பதாகும். இரவில் அர்த்தஜாம வழிபாட்டில் எல்லாப் பொருள்களும் இறைவனிடத்து ஒடுங்கி இருக்க, அவ் இறைவன் நுட்பத்திற்கு நுட்பமாக - அணுவிற்கு அணுவாக இலங்கும் நிலையினைக் கண்டு

வழிபடுவதாகும். உலகை வலம் வருதல் விசுவரூப தரிசனம் போன்றது. பசுவை வலம் வருதல் அர்த்தஜாம வழிபாடு போன்றது.

இத் தத்துவங்களைத்தான் ஞானப் பழம் வேண்டி முருகனும் விநாயகரும் நிகழ்த்திய திருவிளையாடலில் வைத்து முன்னோர்கள் விளக்கினர். முருகனுக்கு அம்மை அப்பர்தான் உலகம் என்பது தெரியாததும் அல்ல; விநாயகருக்கு உலகைச் சுற்றி வருவது இயலாததும் அல்ல. அப்பிள்ளைகள் இருவரில் விநாயகர், அம்மை அப்பரிடத்து உலகம் ஒடுங்கியுள்ளது என்பதையும், முருகன் இவ் வுலகம் அனைத்திலும் அம்மை அப்பரே நிறைந்துள்ளனர் என்பதையும் உலகுக்கு உணர்த்தவே அத்திருவிளையாடல்களை நிகழ்த்தினர். இவற்றினை இங்ஙனம் நுணுகிப் பார்த்து அறிதல் அவசியம்.

வலம் வந்த அனுபவம் :

இவர்கள் 16 ஆண்டுகளாகத் தேசசஞ்சாரம்செய்து பொதுவாக பாரதத்திற்கும், சிறப்பாகத் தமிழ்நாட்டிற்கும் சமயத் தொண்டு புரிந்து வருகிறார்கள். இந்து மதம் எனக் குறிக்கப் பெறும் சைவ வைணவக் கோட்பாடுகளை நாடு முழுவதும் பரவச் செய்து வருகிறார்கள். பெரியதினும் பெரியதாக இலங்கும் விசுவரூபதரிசனம் போன்று இவர்கள் இதனைச் செய்து வருகிறார்கள். அணுவினும் அணுவாக அர்த்தஜாம வழிபாடு போன்று நாமும் இங்கிருந்து வழிபாடு செய்து வருகின்றோம். ஒருமுறை, பசு கன்று ஈனும் நேரத்தில் இருமுகங்களும் தெரியும் நிலையில் வழிபாடு செய்து வலம் வரும் பேறு நமக்குக் கிடைத்தது. இதனால் பூபிரதட்சிணம் செய்த புண்ணியம் பெற்றோம்.

மழையும் நீரும் :

மேலும் இவ்விரு வகை வழிபாடும் மழை பெய்வது போலவும், குறிப்பிட்ட இடத்திலிருந்து செடிக்குத் தண்ணீர் ஊற்றுவது போலவும் பயிர் வளரப் பயன் படுவனவே ஆகும். மேகம்போன்று இவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் நாட்டு மக்களுக்கு நற்பணி புரிகின்றார்கள். செடிக்கு அருகில் இருந்து வேரில் நீர் ஊற்றிக் காப்பதுபோன்று இருந்த இடத்திலிருந்து நாம் வழிபடும் பணியைச் செய்துவருகின்றோம். இருப்பினும் எங்கும் சென்று மக்களிடத்துச் சமய உணர்வூட்டி அவர்களின் சுகதுக்கங் களை அறிந்து நெறிப்படுத்தி அவ்வகையில் பணிபுரியவேண்டும் என்னும் கருத்துடையோம். கனிந்துவரும் காலத்தை எதிர் நோக்கியுள்ளோம்.

சென்று பணி செய்வோம் :

மக்களை நெறிப்படுத்தும் பணி செய்வோர் மக்களிடத்துச் சென்று பணிபுரியவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. அதனால்தான் திருவள்ளுவர் நிலத்தின் பயனை விரும்புவோர், அந் நிலத்திற்கு நாளும் சென்று கண்காணிக்க வேண்டும் என்னும் கருத்தில்,

" செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும் "

என்று கூறுகின்றார். ஆன்மீக நெறியாளர்கள் ஞான ஏர் உழவர்களாக இருந்து நன்னெறிகளாம் விதைகளை மக்கள் மனம் எனும் பாத்தியில் விதைத்து அறியாமையாம் களைகளை நீக்கி மெய்ஞ் ஞானமாம் பயிர் தழைத்துச் செழிக்கப் பாடுபடுதல் அவசியம். அத்தகு தருணம் இப்பொழுது நெருங்கிவந்து கொண்டிருக்கிறது. ஆன்மீக ஞானிகளின் பணிக்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பணியினைச் செய்ய வாய்ப்பருள இறையருளைப் பிரார்த்திப்போம்.

புண்ணிய சீலர் :

ஸ்ரீ சங்கர மடத்து 69 ஆவது பீடாதிபதிகளாய் இருக்கும் இக் காலத்தில் அத்திருமடத்தில் திரிவேணியைப் போல் மூவர் ஏக காலத்தில் வீற்றிருத்தல், இதற்கு முன் வாய்க்காத பெருமைக் குரியது. "இந்து சமய மன்றம்'' என்னும் அமைப்பின் மூலம் சமயப் பணியையும், 'ஜனகல்யாண்' என்னும் அமைப்பின் மூலம்சமுதாயப் பணியையும் இடையருது செய்து வருகிருர்கள். தம் ஐம்பதாவது அகவையின் பூர்த்தி நினைவாகப் பாடல் பெற்ற திருக்கோயில்கள் ஐம்பதுக்குத் திருக்குடமுழுக்கு விழாக் கண்ட புண்ணியப்பேறு உடையவர்கள். இத்தகு சமய சமுதாய நலம் காணத் தொண்டாற்றும் இவர்களை வரவேற்றுச் சிறப்புச் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்ருேம்.

வாழ்த்து :

இவர்கள் திருமேனி நலமும் வளமும் பெற்றுத் திகழவும், மிகக் குறுகிய காலத்தில் விழா ஏற்பாடு செய்திருந்தாலும் அத்வைதத் திருமடத்தின் குரவரையும் சித்தாந்தத் திருமடத்தின் குரவரையும் இணைந்து தரிசிக்க வேண்டும் என்னும் பக்தியுணர்வில் வந்துள்ள மயிலாடுதுறை மற்றும் சுற்று வட்டாரத்து அன்பர்களும் அறிஞர் களும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும் ஸ்ரீ செந் தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

சமயம் புரக்கும் சான்ருேர் வளர்க.

கல்வி யுகத்திற்குத் தமிழ் (2)

டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்.

(இக்கட்டுரை, துணைவேந்தர் டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி அவர்கள் கோலாலம்பூரில் நடந்த ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரையாகும். இக்கட்டுரையில் தமிழில் அறிவியல் இயக்கம், கலைச்சொல்லாக்கம், எழுத்துச் சீரமைப்பு முதலிய துறைகளில் ஆசிரியர் வழிகாட்டுகிறார். இக்கட்டுரைத் தொடர் தினமணி நாளிதழில் வெளிவந்தது. நன்றி: தினமணி)

ஒலி பெயர்ப்பு :

பிறமொழிச் சொற்களை ஒலி பெயர்க்கும்பொழுது, நம் மொழியில் இல்லாத ஒலிகட்கு என்னசெய்வது என்ற பிரச்சினை எழுகிறது. உலகில் உள்ள எல்லாமொழிகளிலும் உள்ள ஒலிகளை நம்மொழியோ, வேறு எந்த மொழியோ கொண்டிருக்க முடியாது. அதே சமயத்தில் உலகின் பெரும்பான்மையான, அதுவும் முன்னேறிய நாட்டினர் மொழிகளில் உள்ள முக்கிய ஒலிகள் நம் மொழியில் இல்லை எனின், நாம் அதை அறவே புறக்கணிக்கவும் இயலாது. ஜ, ஷ, ஸ, ஹ போன்ற பழக்கத்திலிருக்கும் ஒலி எழுத்துக்களைக் கூடப் பயன் படுத்துவதா அல்லது தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 ஒலி எழுத்துக்களே போதுமெனக் கொள்வதா என்ற வாதமும் நடை பெறுகிறது. இதற்கு நாம் இறுதியான பதில் கூறத் தேவையில்லை. பலர் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். சிலர் பயன் படுத்துவதில்லை. தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் எந்த அணுகு முறையை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கட்டும். அறிவியல் இலக்கியத்தைப் பொறுததவரை கிரந்க எழுத்துக்களைப் பயன் படுத்துவதை, அல்லது அந்த ஒலிகளைக் குறிக்கும் வரிவடிவங்களை ஏற்பதே சிறந்தது என்பது என் கருத்து. ஜ, ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்களை ஏற்க என் உணர்வு மறுக்கிறது. என் பழக்கமும் அது அன்று. ஆனால் அறிவுபூர்வமாக நாம இந்தப் பிரச்சினையை அணுகும்பொழுது இவற்றை ஏற்பதே முறை என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது.

"உலகத் தோடொட்ட ஒழுகல், பலகற்றும் கல்லார் அறிவிலா தார்" என்பது மொழிக்கும் பொருந்தும். இந்த ஒலிகள் இந்திய

மொழிகள் அனைத்திலும் உள்ளன. மேலைநாட்டு மொழிகள் அனைத்திலும் உள்ளன. நாம்மட்டும் தனித்து நிற்கிறோம். நீண்டகால அளவில் நாம் அப்படி நின்று சமாளிக்க இயலாது. அப்படி ஒரு மலையேறும் முயற்சி தேவையுமில்லை. ஒரு சில ஒலிகளை நாம் ஏற்காவிட்டால் உலக வழக்கிலிருந்து பல பெயர்களை நாம் அடையாளம் தெரியாத அளவுக்கு மாற்ற வேண்டி வரும். மற்ற இந்திய மொழிகள் அனைத்தும் அறிவியல் ஆய்வாளர்கள், அவர்களது தேற்றங்கள் தத்துவங்கள் ஆகியவற்றைக் கிட்டத்தட்ட மூலத்தின் ஒலிக்கேற்ப எழுதும் வலிமை பெற்றிருக்க, நாம் மட்டும் அவற்றை அடையாளம் கண்டு கொள்ள இயலாத அளவிற்கு மாற்றி எழுதுவது நமது மாணவர்கட்கு நன்மை செய்வதாகாது.

தமிழ் சமணமும், பௌத்தமும், சைவமும், வைணவமும் மட்டும் வளர்த்த மொழி அன்று; அது, கிறிஸ்தவம் வளர்த்த மொழி; இஸ்லாமியம் வளர்த்த மொழி. 'மஸ்தான்' என்னும் இஸ்லாமியத் தோழனை 'மசுத்தான்' என்று எழுதச்சொல்லி நாம் வற்புறுத்த முடியாது. 'இக்னேஷியஸ்' என்ற கிறிஸ்தவத் தோழனை 'இக்குனேசியசு' என்று எழுதிக்கொள்ளுமாறு கூற நமக்கு உரிமை இல்லை. வழக்கில் இல்லாத எழுத்துகளைப் பயன்படுத்தினுல். எதிர்ப்பு தெரிவிப்பதும் இயலும். ஆனுல் இவ்வெழுத்துகள் இலக்கியவழக்கில் 500 ஆண்டுகட்குக்குறையாது இடம்பெற்றவை கல்வெட்டுகளில் நீண்டகால அளவில் இடம்பெற்றவை. ஓரளவுக்கு மேல் நாம் வரலாற்றைத் திருத்துவதிலும், மாற்றங்களை எதிர்ப்பதிலும் நமதுநேரம், நினைவு, ஆற்றல் அனைத்தையும் செலவிடுவது வளர்பவர் நாடும் வழியாகாது.

புதிய எழுத்துக்களைக் சேர்க்காது, தமிழ் நெடுங்கணக்கில் இருக்கின்ற எழுத்துகட்கு, ஒரு குறியீட்டைச் சேர்ப்பதன் மூலமும், தகுந்த வழியில் ஆய்த எழுத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஒலிகளைத் தமிழில் உருவாக்கிக் கொள்வதும் இயன்றதாகும். இது எண்ணப்பட வேண்டிய ஒன்று.

முன் ஒட்டு பின் ஒட்டு :

துறைச் சொற்களை உருவாக்குவதற்கு, மேலைநாட்டு மொழிகள் சில சிறந்த வழி முறைகளை வகுத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று முன் ஒட்டு (Prefix), பின் ஒட்டு (Suffix) களைப் பயன்படுத்துவது. சில சான்றுகள் பின்வருமாறு: Macro-Micro, Tele-Mono, ism-logy. இவைபோன்ற "ஒட்டுக்கள்" சொல்லாக்கத்தை எளிமைப் படுத்துகின்றன. புதிய சொல்லனும் கட்டடம் அமைப்பதற்கு

முன்பே செய்து வைக்கப்பட்ட செங்கல்போல, கதவுபோல, சாளரம் போலப் பயன்படுகின்றன. முறையாக அடுக்கி, உரிய இடத்தில் அமைத்துக் கட்டடத்தை உருவாக்கவேண்டும்.

குறியீடுகள் :

அறிவியல் இலக்கியத்தில் ஏராளமான குறியீடுகள் இருக்கின்றன. அவை உலகு தழுவிய வழக்கிலிருப்பவை. ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டபொழுது ஒருகுறியீடு, அந்தமொழிச் சொல்லின் முதல் எழுத்து என்றகாரணத்தால் இடம் பெற்றிருப்பினும் பின்னர் அது முதல் எழுத்தாக அல்லாத பிறமொழிகளிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சான்றாக, "திசை வேகத்திற்கு" V என்ற எழுத்து, குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது. இது Velocity என்ற ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்து. ஆனல், ஜெர்மன் மொழியில் திசைவேகத்திற்குப் பயன்படுத்தப்படும் சொல் Geshwindigkeit. அதன் முதல் எழுத்து G. எனினும், திசைவேகத்திற்கு ஜெர்மன் மொழியிலும் பயன்படுத்தப்படும் குறியீடு V தான். அதேபோல நீரின் மூலக்கூறு H^2O என்ற சூத்திரத்தால் குறிப்பிடப்படுகிறது. இது, Hydrogen, Oxygen என்ற சொற்களின் முதல் எழுத்தாக அவற்றின் அணுவைக் குறிக்கப் பயன்படுத்தப்படுபவை. இன்று சித்திர எழுத்துக்களைக் கொண்ட ஜப்பானிய மொழியிலிருந்து, மற்ற உலக மொழிகள் அனைத்திலும் H^2O தான் பயன்படுத்தப் படுகிறது. இவைபோன்ற எண்ணிறந்த குறியீடுகளை, சூத்திரங்களை நாம் ஏற்கவேண்டும். இவை அனைத்தும் கிரேக்க, ரோமன்எழுத்துக்களால் அமைந்தவையே.

ஒலி பெயர்ப்பு - மொழி பெயர்ப்பு :

அறிவியல் உலகம் அளவைகளால் ஆனது. மெட்ரிக் முறையை ஏற்றிருக்கிறோம். மீட்டர், கிராம் ஆகியவை மொழி பெயர்க்கப்பட இயலாதவை. பல அளவைகள் அவற்றுடன் தொடர்புள்ள இயற்றினர் பெயரைத் தாங்குபவை. ஆம்பியர் (Ampere), ஓம் (Ohm) போன்றவை மின் துறையில் பயன்படுத்தப் படுகின்றன. இரண்டும் ஆய்வாளர்களின் பெயர்கள். இப்படிப் பல. Radar என்பது இடுகுறிச்சொல். Radio Detecting and Ranging என்பதில் உள்ள சொற்களின் முதல் எழுத்துகளின் கூட்டால் அமைந்தது. இதை நாம் ஒலிபெயர்ப்பதே முறை.

புதிய சொற்கள் படைப்பதிலும், மொழிபெயர்ப்பதிலும் ஒரு சொல்லின் வேர் என்ன என்பதை மனதிற் கொள்ளவேண்டும். Engineering என்பதைப் பொறியியல் என்கிறோம். இச்சொல்

Engine என்பதன் அடிப்படையில் வந்ததாக எண்ணிச் செய்யப் பட்ட மொழிபெயர்ப்பு. ஆனால், இதற்கு Ingeniosus என்ற இலத்தீன் சொல் வேராகும். ஆங்கிலத்தில் நாம் பயன்படுத்தும் Ingenious, Ingenuity ஆகியன இச்சொல்லின்னின்றும் பிறந்தவை. ஜெர்மன் மொழியில் பொறியியலாளரை Ingeniosus என்று தான் குறிப்பிடுகிறார்கள். நாம் Engineering என்பதைப் பொறியியல் என்று மொழிபெயர்த்த பின் Safety Engineering, Human-Engineering போன்ற சொற்களை மொழிபெயர்ப்பது கடினமாகி விடுகிறது. பொறியியல் என்ற சொல் வழக்கில் வந்துவிட்டது. அதை மாற்ற வேண்டுமென நாம் கூறவில்லை. ஆனால், தொடக்கத் தில் மேலெழுந்தவாரியாக மொழி பெயர்ப்பை அணுகுவது சில அடிப்படைத் தவறுகட்கு இடம் தரும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

புதுச்சொற்களை உருவாக்கும்பொழுது அவை முடிந்தவரை தனிச் சொல்லாக (Single word) இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். Budget என்பதை "நிதிநிலை அறிக்கை" "வரவு செலவு அறிக்கை" என்கிறோம். இது பட்ஜெட் (BUDGET) என்பதன் விளக்கம். அதற்கான மாற்றுச் சொல் அன்று. இன்று நாம் Water Budget என்கிறோம். மேலும் Budgeting என்றும், Budgetary என்றும் வினைச்சொல்லாக, உரிச்சொல்லாகப் பயன்படுத்துகிறோம். நிதிநிலை அறிக்கை, வரவு செலவு அறிக்கை போன்றன இப்படிப் பட்ட தெளிவுகளிவுகட்கு இடந்தரா.

இயன்றவரை ஒரு சொல் அதனின்றும் பல சொற்கள் உருவாகக் கூடியதாக அமைய வேண்டும். Atom என்ற ஆங்கிலச் சொல்லை எடுத்துக்கொண்டால் அதனின்று, Atomic, Atomize, Atomizer, Atomism, Atomist, Atomistic போன்ற சொற்கள் அமைக்கப்படுகின்றன. பழந்தமிழர் சொல்லாக்கத்தில்எளிமையைக் கையாண்டிருக்கின்றனர். தளிர், தளிர்த்தல். தழை, தழைத்தல் என்று பெயர்ச் சொல்லை வினையாக்கியிருக்கிறார்கள். அல்லது வினைச்சொல்லிலிருந்து பெயர்ச் சொல்லை அமைத்திருக்கிறார்கள். நாமானால் தளிர்த்தலை, "தளிர் விடுதல்" என இரண்டு சொற்க ளாகச் செய்திருப்போம். "முயல்தலை" "முயற்சி செய்தல்" ஆக்கி யிருக்கிறோம் அல்லவா?

சொற்களின் பொருளில் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. இவை நமது சொல்லாக்கத்திலும் இடம் பெற வேண்டும். Wind, Air இரண்டுக்கும், "காற்று" அல்லது "வளி"; இரண்டும் பயன் படுத்தப்படுகின்றன. Air வேறு, Wind வேறு. (Air in motion is wind). இரண்டிற்கும் தனித் தனிச் சொற்கள் தேவை. தமிழில்

இருக்கும் சொல்வளத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. காற்று என்பதற்குச் சூடாமணி நிகண்டு 31 சொற்களைத் தருகிறது. தென்றலுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களையும் சேர்த்தால் 36 ஆகிவிடும். இந்தச் சொல்வளத்தை முறையாகப் பயன்படுத்தாமை நம் குறையேயன்றி மொழியின் குறையன்று.

அறிவியல் துறைகளில் இயற்கையின், இயற்கைப் பொருள்களின் பல நிலைகட்கும் பொதுவான சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. நீர் என்பதை நாம் தண்ணீருக்கு மட்டும் பயன் படுத்துகிறோம். எல்லா நீர்ப்பொருளுக்கும் பொதுவான சொல் Liquid. இதற்குத் திரவம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதையே கையாளலாம். அல்லது ஒரு குடும்பத்தில் ஒரு தனிப் பொருளையும், அக்குடும்பத்தைச்சார்ந்த பொருள்கள் அனைத்தையும் குறிப்பதற்குச் சொற்களை ஆக்குவதற்குச் சில விதிகளை உருவாக்கலாம்.

தமிழில் "அம்" என்பது சிறப்பு விகுதி. சான்றாக, கம்பு என்பது ஒரு கோல (Stick). கம்பம் என்பது தூண் (Pillar) மதி என்பது நிலவு (Moon); மதியம் என்பது முழு நிலவு (Full moon) இந்தச் சிறப்பு விகுதியைப் பொதுமை விகுதியாகப் பயன்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். அதாவது, ஒரு குறிப்பிட்ட பொருளுக்குப் பயன்படுத்தப்படும் சொல்லை "அம்" விகுதி சேர்ப்பதன் மூலம் அப்பொருளுக்கு துணையான அடிப்படைப் பண்புகளுடைய எல்லாப் பொருள்களையும் குறிக்கும் சொல்லாக மாற்றலாம் என்பதை விதியாகக் கொண்டால் – அந்த விதி சரியா, தவறு என்பது வேறு; அப்படிச் செய்யலாம் எனக் கொள்வோமானால் - அதே அடிப் படையில் பொதுமைச் சொற்களைக் கீழ்க்கண்டவாறு அமைப்பது பற்றி எண்ணலாம்.

"நீர்" என்பது தண்ணீர்; "நீரம்" என்பது திரவம். நீர் திரவங்களில் (நீரங்களில்) ஒன்று. "வளி" என்பது அசையாத காற்று (Air). வளியம் என்பது Gas. காற்றும் ஒரு வளியம். மேலும் Gas, Liquid இரண்டிற்கும் பொதுவான சொல் Fluid. இதற்கு ஏற்ற தமிழ்ச் சொல் காணவேண்டும். பாய்மம் என்ற சொல் பரிந் துரைக்கப்படுகிறது. ஆனால் அது அமைப்பில் பண்புப் பெயர் போன்று ஒலிக்கிறது.

ஆங்கிலத்தில் கலைச்சொற்கள் ஒரு நீண்ட காலகட்டத்தில் உருவாயின. பலரால் வெவ்வேறு சூழ்நிலைகளில் சொற்கள் உருவாக்கப்பட்டன. எனவே அதில் பெருத்த சீர்மை (Uniformity) இருப்பதற்கு இடமில்லை. நாம் முந்நூறு ஆண்டு அறிவியல்

வளர்ச்சியை நம் முன் வைத்துக் கொண்டு, சொற்களை உருவாக்குகிறோம். ஒரு புது நகரைத் திட்டமிட்டு உருவாக்குவது போன்ற வாய்ப்பு நமக்கு இருக்கிறது. புலமையும், கற்பனையும் செய்யவேண்டுமென்ற ஆசையும், உள்ளத்தில் உறுதியும் நமக்கு இருந்தால், எளிமையும், எழிலும் இணைந்த "அறிவியல் தமிழை" உருவாக்கலாம்.

ஏதோ அறிவியல், தொழில்நுட்பம் போன்ற சொற்கட்குத் தான் துறைச் சொற்கள் தமிழில் இல்லை என்பதன்று. அன்றாட வாழ்வில் இன்றைய உலகம் பயன்படுத்தும் பல ஆங்கிலச் சொற்கட்கு இணையான சொற்களை நாம் அமைத்துக் கொள்ளவில்லை. சான்றாக Knowledge வேறு; Wisdom வேறு. நாம் இரண்டிற்கும் "அறிவு" என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்துகிறோம். துல்லியமாக நாம் இவற்றிற்குச் சமமான சொற்களை வரையறுக்கவில்லை. Furniture, Career போன்ற சாதாரண வழக்கிலிருக்கும் பல சொற்களை நமது எழுத்தாளருலகம் தமிழாக்கவில்லை. ஆங்கிலச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்துத் தமது சிறுகதைகளில், புதினங்களில் பயன்படுத்தித் திருப்தியடைந்து விட்டனர். கவர் ஸ்டோரி (Cover story), தண்ணீர்சப்ளை (Supply), காமிக் (Comic) ஜோக் (Joke), காம்ப்ளெக்ஸ் (Complex) போன்ற எண்ணற்ற ஆங்கிலச் சொற்கள் இலக்கிய வழக்கில் இருக்கின்றன. தமிழில் சொல்லாக்கும் முயற்சியின் சாயலே இங்குத் தென்படவில்லை. இலக்கியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, மொழியை வளர்ப்பது, வளப்படுத்துவது. நமது இலக்கியப் படைப்பாளர்கள் உருவாக்கிய புதுச் சொற்கள் கணிசமானவை யல்ல. இதில் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற துறையைச் சார்ந்தவர்கள் பெருந்தொண்டு செய்திருக்கின்றனர். (தொடரும்)

ஜேம்ஸ் ஏலன் சிந்தனைகள்

எல்லா உண்மையான சீர்திருத்தமும் தன்னிடமிருந்து தான் வெளிப்படவேண்டும். அதன் மூலம் அவர் தம் இதயமும் மனமும் மாற்றம் பெறவேண்டும்.

*

மனதாலும் உடலாலும் தூய்மை அடைவாய்! புலன் வழி இன்பங்களைத் துறப்பாய். சுயநலத்திலிருந்து மனத்தை மாற்றுவாய்-மேம்பட்ட தூய்மையான வாழ்வை வாழ்வாய்!

சிவமயம்

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

அழைப்பினை ஏற்று வருகை தந்த

காஞ்சி, ஸ்ரீ காமகோடிபீடம் 69 ஆவது பீடாதிபதி

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு

தருமை ஆதீனத்தில்

சிறப்பான வரவேற்பு

பொன்விழா ஆண்டை முன்னிட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட சிவாலயங்களுக்குத் திருப்பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகம் புரிவித்தவர்களும், இந்திய நாட்டின் வடபகுதி முழுதும் யாத்திரை செய்து இந்து மதத்தின் சிறப்பை மக்கட்கு உணர்த்தி அவர்களை நன்னெறிப்படுத்தியருளியவர்களும், இந்நாட்டின் பழம் பெரும் கலைகளின் வளர்ச்சிக்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருபவர்களும் இந்து மத உணர்வை மக்கட்கு ஊட்டி அவர்களை ஒருங்கிணைக்க ஜனகல்யாண் என்ற அமைப்பை ஏற்படுத்தி நாடு முழுதும் அதனை நன்கு செயற்படுத்திவருபவர்களுமான காஞ்சி, ஸ்ரீ காமகோடி பீடத்தின் 69 ஆவது பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தக்ஷிண யாத்திரை மேற்கொண்டு வருவதை அறிந்து தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், ஆதீன அன்பர்கள் மூலம் சுவாமிகளைத் தருமை ஆதீனத்திற்கு வர வேண்டுமென அழைத்தருளச் செய்தார்கள். ஆதீன அழைப்பினை ஏற்று, சுவாமிகள் அவர்கள் 29—1—88 வெள்ளிக்கிழமை அன்று தருமை வர இசைந்தார்கள். சுவாமிகள் அவர்கட்குத் தருமை ஆதீனத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சுவாமிகள் 29—1—88 மாலை 6 மணிக்குத் தருமபுரம் எழுந்தருளினர்கள். வடக்கு முகப்பு வாயிலில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. மேளவாத்தியங்களுடன் அன்பர்கள் புடைசூழ சுவாமிகள் ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினர்கள்.

ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் மாணவர்கள் ஊர்ப் பொது மக்கள் அணிவகுத்து, ஸ்ரீ சுவாமிகளை வணங்கி வரவேற்றனர்.

ஸ்ரீ சுவாமிகள் சொக்கநாதர் பூஜை மடத்திற்குச் சென்று ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை வழிபட்டார்கள். பூஜை மடத்தின் வாயிலில் எழுந்தருளியிருந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஜயேந்திரசுவாமிகளை வரவேற்றார்கள். இரு குருமணிகளும் விழா அரங்கிற்கு எழுந்தருளிக் கொலு வீற்றிருந்தார்கள்.

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் அச்சிட்ட வரவேற்பிதழைக் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் படித்தளித்தார்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் சிறப்பியல்களை எடுத்துக் கூறியும் அவர்கள் செய்த பூப்பிரதக்ஷிணத்தைப் பாராட்டியும் அருளுரை வழங்கினார்கள்.

ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள் யாத்திரையால் தங்கட்கு விளைந்த அனுபவங்களை எடுத்துக் கூறியும் ஆதீனச் சார்பில் வரவேற்றுச் சிறப்பித்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் அருளுரை நிகழ்த்தினார்கள்.

விழா நிகழ்ச்சிகட்குப்பின் இரு குருமணிகளும் தனித்திருந்து தங்கள் அருள் அனுபவங்களைப் பற்றியும், இன்றைய உலகில் சமய வளர்ச்சிக்கு அரசும் மக்களும் திருமடங்களும் ஆற்றவேண்டிய பணிகள் பற்றியும் அளவளாவினார்கள்.

இரவு 8 மணி அளவில் ஸ்ரீ சுவாமிகள் ஆதீனத் திருமடத்திலிருந்து பிரியா விடை பெற்றார்கள்.

ஜேம்ஸ் ஏலன் சிந்தனைகள்

எங்கு சுயநலம் முடிவுறுகிறதோ அங்குத் துன்பம் முடிவுறுகிறது.

★

சுயநலத்தைத் துறந்த இதயத்தில், சுத்தமான மகிழ்ச்சி வந்து நிரம்புகிறது.

ஞான வேள்வி

'கதிரவன்'

சமயப் பொதுமை தழைத்திடவும்
சாத்திர நன்னெறி பரவிடவும்
அமையும் கட்டுரைத் தொகுப்பாகி,
அனைவரும் படிக்கும் எளிமையுடன்
தமிழும் சைவமும் தழைத்தோங்கத்
தக்க அறிஞர் கருத்துமணம்
கமழும் ஞான சம்பந்தம்
கற்போர்க்(கு) அமுத விருந்தாகும்! 1

விளம்பும் தகவைக் கொண்டென்றும்
விளங்குக ஞான வேள்வியாய்!
தெளிவாய்ச் சைவ வைணவத்தில்
தெரியும் ஒற்றுமை நிலைகாட்டும்!
வளர்ந்த கூந்தல் அரிந்தெடுத்து
வந்த அடியார் தம்நெஞ்சம்
குளிரக் கொடுத்த அடியாரின்
குணத்தை அழகாய் எடுத்தியம்பும்! 2

குருமணி அருளும் உபதேசம்
கோவையாய் மனதில் பதிந்தனவே!
பெருமை சான்ற ஆசியுரை
பேறெனை வாய்த்த நேசவுரை!
திருமுறை சாத்திரப் பாடங்களைத்
தெளிவாய்ப் புகட்டும் மேன்மைசால்
தருமை மலரும் பத்திரிகை
தரணியில் என்றும் விளங்கிடுக! 3

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit.,
Ph. D.. D. P. P. A., D, U. N., J. U.
பருத்தியூர்.

பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய்! இனியான்ஒருவன்
மதத்தே மதிமயங்கேன்; அவர்போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே!

அ. முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே!

(1) முதன்மைத் தேவர்கள் மூவரும் ஏனையோரும் போற்றிப் பரவும் அரும்பனைய முறுவலுடையவள் அபிராமி என்கிறார்.

(2) பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் முதல் தேவர் எனப்படுவர். அவர்கள் நீங்கலான ஏனைய தேவர்கள், கந்தர்வர், முனிவர், சித்தர், இயக்கர் என்றெல்லாம் வகைப் படுத்தப்பட்ட அனைவரும் போற்றும் முகிழ் நகையாள் அம்பிகை.

(3) முகிழ் (அரும்பு) போன்ற முறுவல் உடையவளை அன் மொழித் தொகையாக "முகிழ் நகையே" என்று அழைத்தார். அதிகம் சிரிக்காமலும் அதே நேரத்தில் 'கடுகடுப்பான' முகம் காட்டாமலும் சற்றே முறுவலித்த நிலையினை உணர்த்த "முகிழ் நகை" என்றார்.

(4) 'ஸ்ரீமத் சிம்மாசனேஸ்வரியாக' - பேரரசியாகத் திகழும் அம்பிகையினைக் காணும் அனைவரும் மதிக்கத் தக்க வகையிலும் அதே நேரத்தில் கடுமை காட்டாத இன்முகத்துடன் இருத்தல் அவசியம் அல்லவா! எனவே, அவள் அரும்பு போல் சற்றே முறுவலித்த நிலையில் இருக்கிறாள். முதல் தேவர் முதலானோர்

அவளைக் காணும் போதெல்லாம் முகிழ் நகையுடன் தோன்றுகிருள். "இப்பேரரசி இன்முகத்துடன் காணப்படும் அழகே அழகு" என்று அவர்கள் போற்றுகின்றனர்.

(5) "முறுத்தன முரல்" என்ருர் முன்பும் அபிராமிபட்டர். இலலிதா சகஸ்ரநாம தியான சுலோகம் அம்பிகையை 'ஸ்மிதமுகி'- புன்சிரிப்புள்ள முகத்தினள் என்று வருணிக்கிறது.

(6) காஞ்சி மூககவி அம்பிகையின் முறுவலை வருணித்து மந்தஸ்மித சதகம் என்று நூறு சுலோகங்கள் செய்தார் என்று முன்பே கண்டோம்.

தன் கணவனை பரமசிவனின் முகத்தைக் காணும் பொழுது அம்பிகையின் முறுவல் தளிர்க்கிறது என்றும், அவனது இனிய பேச்சைக் கேட்கும் பொழுது அம் முறுவல் அரும்புகிறது என்றும், ஈசன் உடல்சிலிர்க்க அவனைத் தழுவும் பொழுது அதுவேமலர்கிறது என்றும் வருணிக்கிருர் மூககவி. அம்பிகை வாய்விட்டு மலர்ந்து சிரிப்பது தன் கணவன் அணைக்கும் பொழுது மட்டுமே என்பது இதனுல் புரிகிறது. எனவே முதற்றேவர் மூவரும் யாவரும் அரும் பனைய முறுவலை மட்டுமே காண இயலுமாதையால் "யாவரும் போற்றும் முகிழ் நகையே" என்ருர்.

ஆ. பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம்பற்றி உன்றன் இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்.

1) பக்குவம் மிக்க நிலையில் அன்பால் கசிந்து உருகி உனது திருவடியைப்பற்றி நின்ற மனத்துடன், நின்திருவுள்ளக்குறிப்பின்படி ஒழுகும் படியாக என்னை அடிமையாக ஆண்டுகொண்டாய்.

(2) திருவருளுக்கேற்ற பக்குவப்பட்ட நிலையினைப் 'பதம்' என்ருர். அந்தப் பதமான நிலையில் தாமே அடியவர்களை உள்ளம் உருகச் செய்து ஆண்டு கொள்கிருர். நல்ல பதமான மனநிலை ஏற்படும் பொழுது நம்மை அறியாமலேயே கடவுள் பால் உள்ளம் செல்கிறது. அந்த நிலையில் நம் உள்ளத்தை அவன் கவர்ந்து கொள்ளுகிருன். "கண்ணன் வெண்ணெய் திருடுபவன்" என்ற கருத்து இதனையே உணர்த்துகிறது. வெண்ணெய் என்பது பதமான உள்ளமே.

(3) அம்பிகை அங்ஙனம் பதமான உள்ளத்தை உருகச்செய்து தனது திருவடியில் மனம் பற்றச் செய்து விட்டாள். பின்னர் எச் செயலும் அவன் செயலாகவே கருதி அடியார் செயல் படுவர்.

அவளது திருவுள்ளக் குறிப்பென்று எதனையும் போற்றுவர். அதன் வழியே செயல்பட விளைவும் நன்மையாகவே இருக்கும். இதமே புரியும் அக்குறிப்பின்படி நின்று ஒழுகுவதால் ''இதத்தே ஒழுக'' என்றார். மீளா அடிமையாக ஆட்கொண்டு விட்டதால் அடிமை கொண்டாய் என்கிறார். பதத்தே உருகியது, பாதத்திலே மனம் பற்றியது, இதத்தே ஒழுகியது, அடிமையானது, அனைத்துக்கும் அம்பிகையின் திருவருளே காரணமானதால் 'கொண்டாய்!' என்று அவள் செயலாகவே குறிப்பிட்டார்.

(4) "விரைத்தாமரைத்தாள் சென்னிவைத்தாய், பின்னையான் செய்யும் ஏவல் எல்லாம் அன்றே உன் ஏவல் கண்டாய்'' என்கிறது மதுராபுரி அம்பிகை மாலை.

இ. இனியான் ஒருவர் மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்.

(1) ஆகவே, இனி நான் வேறு எவரது கொள்கைகளிலும் அறிவுக் கலக்கம் எய்தேன். அவர்கள் செல்லும் வழியிலும் செல்ல மாட்டேன்.

(2) அவ்வூரார் கருதியது போல் எளிதில் பயன் தரும் துர்த்தேவதை வழிபாடு, கர்ம மீமாம்ச நெறி போன்ற கோட்பாடு களில் தனது மதிமயங்கவில்லை என்பதனைத் தெளிவாக்குகிறார். ஏனெனில், அவற்றால் பட்டர் மதிமயங்கிப் பித்தராகிவிட்டார் என்று கருதினர்.

(3) கவர்ச்சியான வாதத்தினாலும் வேறுவித ஆசை காட்டு தலினாலும் கேட்பவர் மனத்தைக் கலங்கச் செய்து தம்பால் ஈர்ப்பதும் சில மதத்தவர்களிடம் உண்டு. அம்பிகை ஆட்கொண்ட பிறகு அவ்வாறு மதிமயங்கக் காரணம் இல்லை. ஆதலால் 'மதத்தே மதிமயங்கேன்' என்று உறுதியாகக் கூறுகிறார்.

(4) "அவர்கள் செல்லுகிற கோட்டுபாடுகளில் அடியேன் செல்லமாட்டேன்'' என்பது ஒரு பொருள்.

"அந்த ஊர்ப்பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கமாட்டேன்'' என்பார்கள். அதுபோல் அவர் போன வழியும் செல்லேன் என்றால் "மதிமயக்கும் அம்மதத்தோர் நடந்துசென்ற வழியில் கூடச் செல்ல மாட்டேன்'' என மற்றொரு பொருளும் தருகிறது.

தெளிவான சித்தமும் கொள்கைப் பிடிப்பும் எய்துதலே இப் பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

கட்டுரை எண். 2.

போதமும் சித்தியும்

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞான போதம் மங்கல வாழ்த்திற்குப் பிறகு அவை அடக்கம் கூறும்படி அமைந்திருக்கச் சித்தியார் விநாயகர் வணக்கத்திற்கும் அவையடக்கத்திற்கும் இடையில் சில கருத்துக் களைக் கூறுகின்றது என்பது முன்னர்ச் சிந்திக்கப் பெற்றது. அக் கருத்துக்கள்.

1. பரசிவ வணக்கம்.
2. குருவணக்கமும் நூலின் வழியும்.
3. நுதலிய பொருள், கேட்போர் பயன்,

என்பனவாம். இவற்றை இனி விரிவாகக் காணலாம்.

பரசிவ வணக்கம் :

தெய்வங்கள் பலவாகப் பெருகிப் பலபெயர்களில் குறிக்கப் பெற்றுப் பலமுறைகளில் வழிபடப் பெற்றாலும் அவை அனைத்தை யும் தன்னுள் அடக்கியதாய் அவற்றின் மேலான்தாய், தனக்கு மேல் ஒன்று இல்லாததாய் உள்ளது ஒன்றுண்டு என உணர்தல் அவசியம். அதுவே பரம்பொருள். எனவே, இறை என்பது ஒன்று? பலவா? என்னும் கேள்விக்கு இடம் இல்லை. இக்கருத்தில் தான் திருமூலர்,

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''

என்றருளினார். இங்ஙனம் தெளிவாக இறை, ஒன்று என்னும் கருத்திருக்கப் பல தெய்வங்கள் உருவானதற்குக் காரணம் என்ன? என்னும் கேள்வி இவ்விடத்தில் எழுவது இயல்பு. மனித மனம் வேறுபட்டமையும் பூகோள ரீதியாக ஏற்பட்ட மாறுபட்ட சிந்தனை களும் வழிபடும்நோக்கம் பல்கிப் பிரிந்து போயினமையும் அதற்குக் காரணங்களாகும். வானிலிருந்து விழும் நீர் ஒன்றாயிருக்க, விழும் இடம்காரணமாக நிறம், சுவை, பெயர் வேறுபடுவதனால் மழைநீரே பல என்பது பொருந்தாது. அதே போலத்தான் பெருகியிருக்கும்

பெயர்கள் வேறுபாடுகாரணமாக இறைவன் பல என்று கூறுவதும் பொருந்தாது எனலாம்.

எனவே, எல்லாம் வல்ல பரம்பொருள், அறுவகைச் சமயத்தார் கூறும் தெய்வங்களாயும் ஆனால் அவற்றினின்று வேறுபட்ட தகுதியுடையதாயும் இருக்கும் என்னும் கருத்தில், அருள்நந்திசிவம்,

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்வேறும்
குறியது உடைத்தாய்......"

என்று கூறுகின்றார். இப்பரம்பொருள், வேதாகமங்களின் கருத்துக்களுக்கு எட்டாததாய் இருக்கும் என்றும், அருளால் பொருந்தி அறிவினுக்கு அறிவாகியும் அம்மை அப்பனாகியும் எங்கும் செறிந்து வியாபகமாகியும் நிற்கும் என்றும், அது 'சிவன்' என்று குறித்துப் போற்றப் பெறும் என்றும், அப்பெருமானின் திருவடிமலர்களைப் போற்றி வணங்குவோம் என்றும் ஆசிரியர் கூறுகின்றார்.

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது உடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ(டு) அப்பனாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்."

என்பது அப்பாடல்.

தென்னாட்டு மக்களால் 'சிவன்' என்று போற்றப் பெறுவோனே எந்நாட்டவராலும் 'இறைவன்' என்று வணங்கப் பெறுகின்றான் என்பாராக மணிவாசகர்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்று குறிப்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

அறுவகைச் சமயத்தார் :

ஈண்டு அறுவகைச் சமயத்தோர் என்று குறிக்கப் பெறுபவர் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் சமயத்தவராவர். புறப்புறச்சமயத்தார் :- உலோகாயதர், மற்றும் மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர் வைபாடிகர் என்னும் நால்வகைப் பௌத்தர், ஆருகதர் என்னும் அறுவருமாவர். புறச்சமயத்தார்:-

தார்க்கிகர், மீமாஞ்சக ஏகான்ம வாதிகள், சாங்கியர், யோக மதத்தினர், பாஞ்சராத்திரிகள் என்னும் அறுவருமாவர். அகப்புறச் சமயத்தார் :- பாசுபதர், மாவிரதர், காபாலிகர், வாம மதத்தினர், வைரவமதத்தினர், ஐக்கியவாதசைவர் என்னும் அறுவருமாவர். அகச் சமயத்தார் :- பாடாண வாத சைவர், பேதவாத சைவர், சிவசமவாத சைவர், சிவசங்கிராந்தவாத சைவர், ஈசுவரஅவிகார வாத சைவர், சிவாத்துவித சைவர் என்னும் அறுவருமாவர்.

இறைவன் அவ்வவர் பொருளாய் உள்ளமை :

உலோகாயதர், மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களுமே முதற்பொருள் என்றும் அவை நித்தப் பொருள் என்றும் கூறுவர். நால்வகைப் பௌத்தர் புத்தகடவுளே முதற் பொருள் என்றும், அக்கடவுள் பஞ்ச கந்தங்கள் கூடிப் பல வுணர் வுண்டாகிக் கணபங்கப் படுவதின்றி முத்தி சொருபமாயிருப்பவர் என்றும் கூறுவர். ஆருகதர், அருகக்கடவுளே முதற்பொருள் என்றும், அவர் அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம, நிராயுஷ்யம், சம்மியதா பாவம் என்னும் எண்குணங்களையுமுடையவர் என்றும் கூறுவர். தார்க்கிகர், நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் எனத் திரவியம் (பொருள்) ஒன்பது வகைப்படும்; அவற்றுள் நிலம் முதலிய நான்கும் அநித்தப் பொருள்கள்; இவற்றின் காரண மாகிய நிலவணு, நீரணு, தீயணு, வளியணு என்னும் நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்தும் நித்தப் பொருள்கள். பரமாணுக்கள் கன்மத்துக் கேதுவாகப் பிரபஞ்சமாய்த் தோன்றி நின்று ஒடுங்கும்; ஆன்மா பரமான்மா சீவான்மா என இருவகைப் படும்; பரமான்மா முற்றுணர்வுடையவன்; எல்லாம் வல்லவன்; பிரபஞ்சத் தோற்ற ஒடுக்கங்களுக்குக் கன்ம காலங்கள் போலப் பரமான்மா ஒரு காரணமேயன்றிப் பிறிதில்லை என்பர். மீமாஞ்சகர், வேதமே பிரமம் என்றும், அது நித்தப் பொருள் என்றும் கூறுவர். ஏகான்மவாதிகள், பாற்கரியன், மாயாவாதி, சத்தப் பிரமவாதி, கிரீடாப் பிரமவாதி என நான்கு வகைப்படுவர், இவருள் பாற்கரியர், பிரமம் ஒன்றே பரமார்த்ததில் மெய்ப்பொருள் என்றும், சுரர், நரர், விலங்கு முதலிய சடசித்துக்களெல்லாம் பிரமத்தின் பரிணமம் என்றும், இந்தப் பிரமம் சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் இருக்கும் என்றும் இதுவே ஈசன் என்றும் சொல்வர். மாயாவாதி கள், முன் சொன்ன பிரமமே பரமார்த்தத்தில் மெய்ப் பொருள் என்றும் ஏனைய எல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவிச்சையினாற் காணப்படுவன வாகலிற் பொய் என்றும் கூறுவர். சத்தப் பிரமவாதிகள், பிரமமே முதற்

பொருள்; அது பிரளய காலத்தில் சத்தவடிவாயிருக்கும்; சடமும் சித்துமாய்த் தோன்றி அழியும் எல்லாப் பொருளும் சத்தினது விகாரம் என்பர். கிரீடாப் பிரமவாதிகள், பிரமமே முதற்பொருள்; இந்த பிரமத்திலே முக்குணம் ஆரோபித்தலால் மும்மூர்த்திகளு முண்டாவர்;இவரால் சிருட்டி, திதி, சங்காரம் நடைபெறும் என்பர். சாங்கியர், இருபத்தைந்தாந் தத்துவம் புருடன்; அதுவே முதற்பொருள். அது நித்தமாய் வியாபகமாய் அருவாய்ச் சுத்தமாய் ஞாதாபேதமாய் முற்றுணர்வுந் தொழிலுமின்றி அறிவுமாத்திரமாய் இருப்பது என்றும், ஆன்மாக்களுக்கு வேருய் ஈசுரன் ஒருவன் இல்லை என்றும் கூறுவர். யோக மதத்தினர், இருபத்தாருந் தத்துவம் ஈசுவரன்; அவனே முதற்பொருள்; அவன் முற்றுணர்வுடையவன்; எல்லாவற்றையும் அதிட்டித்து நின்றுசெய்பவன்; ஆன்மாக்களுக்கு ஞானத்தை அறிவுறுப்பவன் என்பர். பாஞ்சராத்திரிகள் வாசு தேவனேபரம்பொருள்; அந்தப்பரம்பொருளினின்றும், கிருட்டிணன் அநிருத்தன், மகரத்துவசன், இரௌகிணேயன் என்னும் நான்கு வியூகர்கள் தோன்றினர்; இவரால் சடமும் சித்துமாகிய எல்லாம் படைக்கப்பட்டன; ஆதலால் எல்லாம் வாசுதேவனது பரிணமமே என்பர்.

பாசுபதர், திருநீறும் சடையுந்தரித்த மூர்த்தியாகிய சிவனே முதற்பொருள்என்பர். மாவிரதர், என்புமாலை தரித்தமூர்த்தியாகிய சிவனே முதற்பொருள் என்பர். காபாலர், காபாலத்தையுடைய மூர்த்தியாகிய சிவனே முதற்பொருள் என்பர். வாமமதத்தார், அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாகிய சிவனே முதற் பொருள் என்பர். வைரவ மதத்தார், தமருகமும் சிலம்பும் தரித்த மூர்த்தியாகிய சிவனே முதற்பொருள் என்பர். ஐக்கியவாத சைவர், பதியே முதற்பொருள்; அது சிவன், சதாசிவன் ,மகேசுவரன் என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் இலக்கணங் களையுடையது என்பர். பாடாணவாத சைவர் முதலிய அகச் சமயத்தவர் அறுவரும் பதி, சிவன், சதாசிவன் மகேசுவரன்என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் இலக்கணங் களையுடையது என்பர்.

இங்ஙனம் பலவகையிலும் பல பெயர்களிலும் சமயங்கள் பலவும் சுட்டுவன அனைத்தும் பரம்பொருளின் தொடர்புடை யனவே என்பது அருள்நந்தி சிவாசாரியரின் கருத்து. இக் கருத்தினை இவருக்குக் காலத்தால் முந்திய தேவார ஆசிரியர்களும் குறித்துள்ளனர். திருஞானசம்பந்தர், " ஆறு சமயங்களுக்கு ஒருதலைவன்...... " என்றும், " முன்னர் இருமூன்று சமயங்களவை ஆகிப் பின்னை அருள்செய்த பிறையாளன்" என்றும், "வேதமொடு வேள்வி பல ஆயின, மிகுத்துவிதி ஆறுசமயம் ஓதியும் உணர்ந்தும்

உளதேவர் தொழ, நின்றருள்செய் ஒருவன் இடமாம்'' என்றும் '' ஆறுசமயங்களும் விரும்பியபடி பேணியரன் ஆகமமிகக் கூறுமனம் வேறிர திவந்தடியார் கம்பம்வரு கோகரணமே'' என்றும் குறிக்கின்றார். திருநாவுக்கரசர்,

'' ஆறொன்றிய சமயங் களின் அவ்வவர்க் கப்பொருள்கள்
வேறொன்றிலாதன''

என்றும்,

'' மிக்கானைக் குறைந்தடைந்தார் மேவலானை
வெவ்வேறாய் இருமூன்று சமயமாகிப்
புக்கானை எப்பொருட்கும் பொதுவானானை...''

என்றும்,

'' அக்கினொடு முத்தினையும் அணிந்து தொண்டர்க்(கு)
அங்கங்கே அறுசமயமாகி நின்ற
திக்கினை...'' என்றும் குறித்துப் போற்றுகின்றார்.

எனவே சமயங்கள் பலவாகப் பிரிந்து நின்றாலும் அவையனைத்தும் குறிக்கும் முதற்பொருள்கள் ஒன்றாயிருக்கும் பரம்பொருளுக்குள் அடங்கியனவே என்னும் பரந்த - உண்மையான நோக்கு தமிழகத்தில் கி. பி. 7ஆம் நூற்றாண்டிலேயே உண்டானது என அறியலாம்.

நதிகள் பலவானாலும் சேரும் இடமாகிய கடல் ஒன்றே போலவும், வழிகள் பலவானாலும் அடையும் ஊர் ஒன்றேபோலவும், பயிலும் வகுப்புக்கள் பலவானாலும் பெறும் நோக்குக் கல்வி ஒன்றே போலவும், சமயங்கள் பலவானாலும் அவை குறிக்கும் இறை ஒன்றே எனத் தெளிந்து கூறிய முன்னோர்களின் சிந்தனை எண்ணிப் போற்றத் தகுந்தது.

(தொடரும்)

மறவாதே

கவிஞர் காராளன்

மறவாதே - நீ - மறவாதே - எங்கும்
மறவாதே அறம்செய என்றும் (மறவாதே)

இருவினை தடுக்கும் திருவினைக் கொடுக்கும்
பிறவியும் கெடுக்கும் பேரறம் செய்ய (மறவாதே)

துயர்தரு ஆசை பொறாமையைக் கொய்வாய்
தொடர்ந்திடும் சினம் இன்னாச் சொல்லையும் கொல்வாய்
இயன்ற போ தெல்லாம் இருப்பதைச் செய்வாய்
ஈதலே அறம்இந்த இன்பமே பெரிதென (மறவாதே)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 2, பக்கம் 82 இன் தொடர்ச்சி.

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (4)

(கி. மு. 427-347)

பிளேட்டோவின் "கற்பனை நகரம்" :

பிளேட்டோவின் நூல்களில் பிரசித்தமானதும் குறிப்பிடத் தக்கதுமானது அவருடைய "குடியரசு" (Republic) ஆகும். அதிலே அவர், தாம் கண்ட அற்புதமான "கற்பனை நகரம்" (Utopia) பற்றி விரிவாக விவரித்துள்ளார். பிளேட்டோவின் "யுடோபியா" தான் சரித்திரம் கண்ட முதல் "கற்பனை நகரம்" ஆகும். இக்கட்டுரையில் அந்தக் கற்பனை நகரம் பற்றிக் கண்டறிவோமாக! அக்கற்பனை நகரில் பிறப்பிலிருந்து குடிமக்களின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் அதன் அமைப்பினை அறியலாம்.

பிறப்பிலிருந்து - ஒரு சித்திரம் :

"குடியரசில்" பிறக்கும் குழந்தைகள் சமுதாயக் கூட்டுறவால் ஏற்பட்ட விளைவு என விவரிக்கப்படுகிறது. சமுதாயத்தில் மிகச் சிறந்த மனிதர்கள் மிகச் சிறந்த பெண்களுடன், உயர்தரமுள்ள குழந்தைகளை உற்பத்தி செய்யும்பொருட்டே, பால் உறவு கொள்ளுகின்றனர். அக்கற்பனை நகரத்திலே தனிப்பட்ட திருமணங்கள் இல்லை; தனிப்பட்ட குடும்பங்களும்கிடையாது. குழந்தைகள் பிறந்த வுடனே அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. அக்குழந்தை கள் பெற்றவர்களிடமிருந்து பிரிக்கப்படுகிறார்கள், அவர்கள் அரசாங்கக் குழந்தை வளர்ப்பகத்தில் (State Nursery) எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். முக்கியமானது ஒன்று என்னவென்றால், பெற்றோர்கள் தம் குழந்தைகளை அறியலாகாது - குழந்தைகள் தம் பெற்றோர்களை அறியலாகாது. இந்த முறையில் தான் சமரசசகோதரத் துவம் (Universal Brotherhood) அவர்களிடையே ஏற்படுத்தமுடியும்

என்பது பிளேட்டோவின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தச் சமுதாய அரசில் (Communal State) ஒவ்வொருவரும் மற்றவரைத் தம் சொந்த சகோதரராக மதிக்கவேண்டும் என்பது ஒரு மாபெரும் நியதியாகும்.

பெற்ருேர்கள் நிலை என்ன? ஆண்களும் பெண்களும் சிறந்த குடிமக்களை உண்டாக்க வேண்டி "சுதந்திரக்காதல்" (Free-love) மேற்கொள்ளலாம் என பிளேட்டோ பேசுகிருர். குடிமக்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடவேண்டிய அவசியம் இல்லை என்பது அவரது கோட்பாடு. அவர்கள் விரும்பினுல் அவர்கள் தம் "மனம்போல் மாற்றம்" ("Range at will") கொள்ளலாம் எனவும் பிளேட்டோ கூறுகிருர். "அரசாங்கம் நாடுவது எல்லாம், இன்ப வாழ்க்கையை உத்தேசித்து இங்கு வாழ்பவர் எவரும் ஒருவரோடு ஒருவர் புண்படுத்திக்கொள்ளல் ஆகாது" என்பதுதான். (All that the state requires is that the citizens should not injure one another in the pursuit of their individual happiness). பிளேட்டோவிற்குப் பின் வந்த அவரது சீடர் அரிஸ்டாட்டில் (Aristotle) பிளேட்டோவின் இந்தக் கோட்பாட்டு அம்சத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிருர்.

பிளேட்டோ காட்டும் அடிப்படைக் கல்வி :

முன்னர்க் குறிப்பிட்டுள்ளது போல, குழந்தைகள் பிறந்தவுடன் அரசாங்கக் குழந்தைகள் வளர்ப்பகத்தார் அவர்களை வளர்க்கும் பொறுப்பை வாங்கிக் கொள்ளுகிருர்கள். குழந்தைகள் 20 வயது வரை ஒரே மாதிரியான கல்வியையே பெறுகிருர்கள். ஆரம்பக் கல்வி பெரும்பாலும் தேகாப்பியாசப் பயிற்சிகளையும், இசைப் பயிற்சியையுமே பாடமாகத் தருகிறது-தேகத்தின் அங்க இலட்சண வளர்ச்சிக்காகத் தேகாப்பியாசமும் (gymnastics), ஆன்மாவின் ஐக்கியப்பாட்டை அணைத்துக்காக்க இசையும் (Music) மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. "எந்த ஒருமனிதனின் ஆன்மாவில் இசை அமையவில்லையோ அந்த மனிதன் நம்பிக்கைக்கு உரியவன் அல்லன்" (The man that hath no music in his soul is not to be trusted) ஏனெனில் அஃது இல்லாதவன் மனம் முடம்பட்டுள்ளது; அவனது உணர்ச்சிகள் ஒத்தனவாக இரா; நல்லது-கெட்டது கண்டறியவேண்டிய சிந்தனைநாசமாகி நிரந்தரமாக உருக்குலைந்து போகிறது. பிளேட்டோவின் கோட்பாட்டில் இசை, ஈடற்ற ஸ்தானத்தை வகிக்கிறது இசை, எத்தகையதாலுைம் எல்லாவித ஐக்கியப் பாட்டையும் அஃது அளிக்க வல்லது. அஃது உலகம், இணைப்பில்லாக் குழப்பத்தில (disjointed chaos) வீழ்வதிலிருந்து

காத்து இரட்சிக்கிறது என்கிருர் பிளேட்டோ. எனவே ஒவ்வொரு வரது கல்வியிலும் இசை ஓர் ஈடற்ற இடத்தைப் பெறுகிறது. ஒவ்வொருவரும் இருபதாவது வயது அடைவதற்குள் இசையிலும் தேகாப்பியாசத்திலும் தங்களைத் தக்கவாறு பண்படுத்திக் கொள் கின்றனர். இவற்றைப் போதிக்கும் பள்ளிகள் ஆண் – பெண் இருபாலாரும் இணைந்து கற்கும் முறையையே (co - educational) கொண்டு இலங்குவன. ஆண்களும் பெண்களும் எவ்விதமான பால் வேறுபாடும் இன்றிப் பழகுவதால் அவர்கள்பால் பாலுணர்வுக் கிளர்ச்சி ஏற்படாது என்பது பிளேட்டோவின் நம்பிக்கை.

குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வி, அடிமைத்தனம் (drudgery) அற்றதாக இருக்க வேண்டும் என்றும், நீரோட்டம் உள்ளதாகவும் அமைய வேண்டும் என்றும் குறிப்பிடுகிருர் பிளேட்டோ. அத்தோடு கல்வி என்பது குதூகலத்தை ஊட்டுவதாக இருக்க வேண்டுமே அன்றிக் கொடுமையானதாக இருக்கலாகாது என்கிருர். (Learning is to be made a pleasure rather than a torture) ஒரு பள்ளியானது, ஒரு மனோ தேகாப்பியாச சாலையாக இருக்க வேண்டும். அஃது ஓர்அறிவுத்துறை விளையாட்டுக் கூடமாக வும் அமைய வேண்டும். அங்கே சிறுவர்கள், கவர்ச்சியான விளையாட்டாகிய கருத்துப் பரிமாற்றத்திலே ஒருவரை ஒருவர் வெல்ல முயலும் முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்கிருர் பிளேட்டோ. (A school should be a mental gymnasium, an intellectual play - ground, where the children try to excel one another in the fascinating sport of exchanging ideas.)

மூன்று வருணங்கள் :

பிளேட்டோ, தம் கல்வி முறையால் மூன்று வருணத்தாரை வடிவாக்குகிருர். முதல் வருணம் கீழ்மட்டத்து வகுப்பு விவசாயிகள், பணியாளர்கள், வியாபாரிகள் ஆகிய முத்திறத்தாரைக் கொண்டது. அடுத்த வருணம்: போர் வீரர்களைக் கொண்டது, மூன்றும் வருணம் மேல் வருணம் - நாடாளும் மேலான பணிக்கென நற்பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் வகுப்பிலிருந்து தான் தத்துவஞானி – அரசன் (Philosopher-King) தோற்றுவிக்கப்படுகிருன்.

'குடியரசில்'' இருபது வயது வரை உள்ளவர்கள் ஒரு நிலை. இருபது வயது வரை மேலே குறிப்பிட்டவாறு எல்லோரும் ஒரே விதமான கல்வியைப் பெறுவர். இந்தக் கட்டத்தில் ஒரு வடிகட்டல் அல்லது களை எடுப்பு (Weeding out) நிகழும். மேற்படிப்புக்குத் தகுதி இல்லாதவர் கீழ் வருணத்தவராக (Lowest class) விலக்கப்

படுவார்கள். அவர்கள் தாம் விவசாயிகளாக, வியாபாரிகளாக, பணியாளர்களாக உருவெடுப்பர். இவர்களே அரசின் "கீழ்நிலை உலோகம்" (Baser metal) என்ற நிலையில் நிற்பர்.

இருபதாவது வயதில் வடிகட்டப்பட்டு, "கீழ்நிலை உலோகம்" நீக்கப்பட்ட பிறகு, மற்றவர்களுக்குப் பயிற்சி தொடர்கிறது. அடுத்து அவர்களுக்குப் பத்து ஆண்டுகட்கு, மேலும் பயிற்சி தரப் படுகிறது. அவர்கட்கு, அறிவியல் துறைகளி (Sciences) லும் கணிதம் (Arithmatic), கோலக்கணிதம் (க்ஷேத்திரக்கணிதம்) (Geometry), வானவியல் (Astronomy) ஆகியவை பயிற்றுவிக்கப் படும். முப்பதாவது வயதிலே மீண்டும் ஒரு களை எடுப்பு நிகழும். இந்தத் தேர்விலே வெற்றி பெருதவர்கள் நீக்கப்பெறுவர். அப்படி நீக்கப் பெற்ருேர் நாடு காக்கும் போர்த் தொழிலை மேற்கொள்வர். அவர்கள் படை வீரர்களாகி இரண்டாம் வகுணத்தவராக இலங்குவர். பிளேட்டோவின் "குடியரசில்" போர்வீரர்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். பிளாட்டோவின் சித்தாந்தத்தின்படி படை, பிறரை அச்சுறுத்தும் ஒரு சக்தி அன்று; தற்காப்புக்கான ஒரு சாதனமே ஆகும். பிளேட்டோ போரை வெறுப்பவர்தான் என்ருலும் நாட்டுப்பாதுகாப்புக்குப் படைபலம் அவசியம் என்பதை அழுத்தமாக வற்புத்துகிருர். இந்த இடைவருணத்தவராகியபோர் வீரர்கள் " காவலர்கள் " (Guardians) என்று பிளாட்டோவால் குறிப்பிடப்படுகின்றனர்.

இந்த இரண்டு களையெடுப்பிற்குப் பிறகு இன்னும் எஞ்சியிருப் பவர் உயர் வருணத்தவராகப் போற்றப்படுவார்கள். இவர்களே தத்துவசாத்திரம் கற்கும் சமர்த்தர்கள் ஆவார்கள். இவர்கள் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்களில் ஆண்களும் உண்டு. பெண்களும் உண்டு. இவர்கள் அரசின் ஆட்சியாளராகப் (rulers of the State) பயிற்றுவிக்கப்படுவர். ஐந்தாண்டுக் காலப் பயிற்சிக்குப் பின்னர் இவர்கள் கோட்பாட்டுப் பயிற்சியை (Theoretical training) முடித்துக் கொண்டு ஆட்சியை மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளவர்கள். அதன் பின் இவர்கட்கு நல்லாட்சித் துறையில் மேல்பட்டப் பயிற்சி (Post - graduate course in good Government) அளிக்கப்படுகிறது. இப்படி அவர்கட்குப் பதினைந்து ஆண்டுக்காலம் அழுத்தமான பயிற்சி தரப்படுகிறது. ஐம்பதாம் ஆண்டு அகவை அடைந்தபின்னரே அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பர். பின்னரே அவர்களிலிருந்து தத்துவஞானி – அரசன் (Philosopher-King) தேர்ந்து எடுக்கப் படுவான்.

இப்படி ஓர்இலட்சிய நாட்டை (Ideal state) மிகச் சிறந்தோரே ஆள முன் வருகின்றனர். பயிற்சியாலும் இயற்கைத் திறத்தாலும்

''மிகச்சிறந்தோரில் மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கப்படுபவரே'' (the Choicest of the best) ஆட்சிப் பொறுப்பினை ஏற்பர். தத்துவ ஞானி - ஆட்சியாளரே எல்லாருக்கும் உயர்ந்த வருணத்தினர். அவர்கள் ஆணையை ஏனையோர் நிறைவேற்ற வேண்டும்-நிறை வேற்றக் கடமைப்பட்டவராவர். நாட்டிலே நாணயம் நிலவ வேண்டி நாட்டில் எவரும் தனிச் சொத்து வைத்திருத்தலாகாது. இதுவே இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் பிளேட்டோ காட்டிய பொது உடைமை (Communism) ஆகும், எல்லோருக்கும் எல்லாம் பொதுவுடைமை. நிலத்தில் நீதியை நிலைநாட்டுவதே பொது நோக்கமாகும்.

மேலே குறிப்பிட்ட மூன்று வருணத்தினர்கட்கும் ஒரு முத்திரையைப் போடுகிருர் பிளேட்டோ. தத்துவஞானி - ஆட்சியாளர்களை (Philosopher rulers) ''தங்க உலோகம்'' (golden metal) என்றும், இடைநிலையைச் சேர்ந்த இராணுவத்தாரை ''வெள்ளி உலோகம்'' (Silver metal) என்றும், கடைநிலைத் தொண்டர்களைக் ''கீழ்நிலை உலோகம்'' (Baser metal) என்றும் பிளேட்டோ பிரித்துப் பேசுகிருர்.

இதுவே பிளேட்டோ காட்டும் ''குடியரசின்'' (Republic) கற்பனை நகரம் (Utopia) என்று வருணிக்கப் படுவதாகும். மற்ற மற்ற பிளேட்டோவின் கோட்பாடுகளை ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு ஆய்வோமாக!

ஆதார நூல்கள் :

100 Great Thinkers by Dr. Jay E. Greene.
Living Biographies of Great Philosophers by Thomas & Thomas
A History of Western Philosophers by Bertrand Russell.
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Stroll
Students' History of Philosophers by Arthur Kenyon Rogers.
Get to know Philosophy By Hugh Harris.

(தொடரும்)

கடிதங்கள்

தெ. முருகசாமி,
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி-623 001.

21—1—1988

அருளார்ந்த சுவாமிகள் திருமுன்பிற்குப் பணிவான வணக்கங்கள்.

சுவாமிகள் திருச்சி வானொலியில் அவ்வப்போது சிந்தனைச் சுடர்களாக உரைத்தருளிய கருத்துக்களைக் கேட்டு மன மொழி மெய்களால் வணங்கினேன். 'சிவம்' என்பதன் பொருள் நயங்களையும் சிவபரம்பொருளின் தன்மைகளையும் ஒருநாள் அருளியஉரையும் இன்று தனு கரண புவன போகங்கள் குறித்து விளங்கியருளிய உரையும் நெஞ்சில் பசுமரத்தாணியாய் நின்றிலங்குகின்றன. போகங்கள் என்பன இன்பம் மட்டும் அன்று, இன்ப துன்ப அனுபவங்கள் என்ற விளக்கம் புதிதாக இருந்தது.

சுவாமிகளின் உரைகேட்ட மகிழ்ச்சியை இவ்வஞ்சல்மூலம் தெரிவித்து ஆசிபெற விழைவதைப் பேருகக் கருதுகின்றேன்.

அன்பன்
தெ. முருகசாமி

★ ★ ★ ★

Dr S. P. SHENBAGARAMAN, M. B. B. S.,
TENKASI

1—2—88.

திருக்கயிலாய பரம்பரை தருமை குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிக்கு வணக்கம். நான் சுமார் பத்து ஆண்டுகளாக "ஞானசம்பந்தம்" பத்திரிகை படித்து வருகிறேன். அதில் தொடர்ந்து வரும் மகாசந்நிதானம் அவர்களின் பெரியபுராணம் அருளுபதேசத்தை ஆர்வமுடன் படித்து மகிழ்கிறேன்.

சென்றவைகாசி மாதத்தில்ஜூன்1, 3 தினங்களில் திருச்சியிலும் மதுரையிலும் உறவினர் இல்லத் திருமணங்களில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. இடைப்பட்ட காலத்தில் சோழநாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் சிலவற்றைத் தரிசிக்க விரும்பிக் குடும்பத்துடன்

காரில் பயணம் செய்தோம். 1—6—87 அன்று மாலை ஐயாறப்பர் தரிசனம் செய்து சுவாமிமலைக்குப் போய்விட்டு இரவு குடந்தையில் தங்கினோம். 2—6—87 அதிகாலையில் புறப்பட்டுத் திருக்கடவூர், புள்ளிருக்கு வேளூர், சீகாழி, திருக்கோலக்கா ஆகிய தலங்களைத் தரிசித்தோம். ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட கோயில்கள் நன்கு பராமரிக்கப்படுவதைக் காண மகிழ்கிறோம். பிற்பகலில் சிதம்பரம் செல்லும் வழியில் நல்லூர்ப்பெருமணம் கோவிலுக்குப் போனோம். அப்போது மணி 2-30. கோவில் நடை சாத்தியிருந்தது. ஆலய நிர்வாகியிடம் நாங்கள் வெகு தூரத்திலிருந்து வரும் விவரம் சொல்லி நடை திறக்கமுடியுமா என்றுகேட்டோம். மாலை நான்கு மணிக்குத்தான் நடைதிறப்பதற்கு விதிகள்உண்டு, அதற்கிடையில் திறக்க இயலாது என்றுமறுத்து விட்டார்கள். வேறுவழியின்றி திரு ஞானசம்பந்தருக்கு ஜோதிவடிவாகக் காட்சிஅளித்த கோபுரத்தைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்ப, சிதம்பரம் போய் இரவே தஞ்சை திரும்பினோம். நல்லூர்ப்பெருமணம் கோவிலைத் தரிசிக்காத குறை மனதில் இருந்தது.

சென்ற மார்கழி மாதம் 4—1—88 இல் சென்னையில் ஒரு உறவினர் மணிவிழாவுக்குச் செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்திக் 3—1—88 காலையில் மறுபடியும் நல்லூர்ப்பெருமணம் கோவிலுக்குப் போனோம். ஆலய நிர்வாகி மிக நல்லமுறையில் ஆலயத்தைச் சுற்றிக்காண்பித்தார். கயிலைக்குருமணி 25 ஆவது மகாசந்நிதான மும் கல்யாணசம்பந்தரும் நிற்கின்றநிலையில் இருந்த காட்சிகளையும் மற்ற சந்நிதிகளையும் விபரமாகச் சொல்லி விளக்கினார்கள். மிக நன்ருக வைத்திருக்கும் ஆலயத்தைத் தரிசனம்செய்த திருப்தியுடன் திரும்பினோம். அன்று மாலையே சென்னையை அடையவேண்டி யிருந்ததால் சிதம்பரம் கோயிலுக்குப் போக நேரம் இருக்காது என்று எண்ணிக்கொண்டு நாங்கள் வரும்வேளையில் சிதம்பரம் தெற்கு ரதவீதியில் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. தேரோட்டம் நடந்து கொண்டு இருந்தது. விநாயகர், சுப்பிரமணியர், சபாநாயகர், சிவகாமி அம்பாள், சண்டேசுவரர் ஆகிய பஞ்சமூர்த்திகளும் நாங்கள் நின்ற இடத்திலேயே வந்து காட்சிகொடுத்தது மனநிறைவை அளித்தது. எங்கள் தலயாத்திரை யும் சிறப்பாக நடந்தது.

சிவனடியார்க்கு அடியார்
சே. பா. செண்பகராமன்

ஏயர்கோன் கலிக்காமர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 3—1—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அது மார்கழிமாதம்! காலை ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு நிறைந்தது! தருமைக் குருமணிகள் மார்கழி மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருதலத்துக்கு எழுந்தருளி உலகநலம்கருதி வழிபாடு) ஆற்றும் நியமம்கொண்டவர்கள். அன்று திருப்பறியலூர்(பரசலூர் ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில் வழிபாடு ஆற்றத் திருவுளம் பற்றியிருந்தார்கள். முதல் ஞாயிறு அன்று இணைந்தது!

காலை 10 மணிக்கு அன்பர்கட்கு அருளுபதேசம் நல்கும் பொருட்டுச் சித்திராசனத்தில் அமர்ந்தார்கள். அன்பர்கள் திருவடி தொழுது வணங்கித் தூநீறு பெற்றணிந்து அமர்ந்தனர். பாராயணம் நிகழ்ந்தது.

குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள். 1988 ஆம் ஆண்டு (ஆங்கிலப் புத்தாண்டு) பிறப்பு – ஆருத்ராதரிசனம், நாயன்மார்களின் குருபூஜைகள் முதலிய சிறப்புத் திருநாள்களைச் சுட்டி விளக்கம் அருளியபின் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தின் வாயிலாகச் சுந்தரர் வரலாற்று விளக்கம் அருளினார்கள்.

சுந்தரர் தொண்டைநாட்டுத் தலங்களை வழிபட்டார்; கச்சியில் இடக்கண் பெற்றுப் பல தலங்களையும் தொழுதுபாடினார். நடுநாடு சேர்ந்தார். திருநெல்வாயில் அரத்துறை எய்தினார். இத்தலம் நிவாநதிக்கரையில் அமைந்துள்ளது. பெண்ணாகடத்துக்கு மேற்கே 4 கல் தொலைவில் உள்ளது. அரவத்துறை என்பது அரத்துறை என ஆயிற்று. இத்தலத்துப் பெருமானைக் 'கல்வாய் அகிலும்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடினார். இப்பதிகத்தில் உலகத்தின் நிலையாமையை ஓதினார். "உய்யப் போவதோர் சூழல் சொல்லே" என்ற அடைவுகொண்டது அத்திருப்பதிகம். இத்தலத்தில் சுந்தரர் அடியார்கள் சூழச் சில காலம் தங்கியிருந்தார். அங்கிருந்து புறப் பட்டுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டார். காவிரியாற்றை

அடைந்து நீராடினர். திருவாவடுதுறை யடைந்தார். அங்குள்ள அடியவர்கள் சுந்தரரை எதிர்கொண்டு வணங்கினர். திருவாவடுதுறையில் அமர்ந்த பெருமான் கழல் வணங்கினர் சுந்தரர். இறைவன் திருமுன்பு நின்று, ''கங்கைவார் சடையாய்!'' எனத் தொடங்கி "அஞ்சல் என்று அருளாய்! ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே" என்னும் அடைவுகொண்ட பதிகம்பாடித் தம் ஆற்றாமையைப் புலப்படுத்தினர். "கண்ணிலேன்; உடம்பில் அடுநோயால் கருத்து அழிந்து உனக்கே பொறையானேன்" என்றும், "மதியிலேன், உடம்பில் அடுநோயால் மயங்கினேன்" என்றும் இப்பதிகத் திருப்பாடல்களில் தாம் உடல் நோயால் வருந்துதலைச் சுந்தரர் குறித்தருளினர். மேலும் இத்தலத்து இறைவி தன் திருப்பெயரை "ஒப்பிலா முலையாள் ஒருபாகா" என்ற தொடரால் உணர்த்தியருள்கின்றார். ஒற்றியூரில் ''என் கண்ணுக்கு ஒரு மருந்துரையாய்'' என்பது முதலாக வேண்டியமை போலவும், வடதிருமுல்லை வாயிலில், "அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே'' என வேண்டியது போலவும் அமைந்தது இத்திருப்பதிகம் என ஒப்பீட்டாய்வு அருளியமை சிறப்பாக அமைந்தது.

இறைவனிடம் அருள் விடைபெற்றுத் திருத்துருத்தி அடைந்தார். துருத்தி என்பது ஆற்றிடைக்குறை என்ற பொருளது. காவிரியின் நடுவில் அமைந்தது. இக்காலத்தில் திருத்துருத்தி, குத்தாலம் என வழங்கப் பெறுகின்றது. உத்தாலம் என்னும் ஒரு வகை ஆத்தி தலவிருட்சமாதலால் குத்தாலம் எனப் பெறுகின்றது. சுந்தரர், திருத்துருத்தி நாதரைப் போற்றினர். ''அடியேன் உடலின் மேல் உற்ற துன்பத்தை நீக்கி அருள வேண்டும்'' என வேண்டினர். அப்போது பெருமான் ''நீ இத்திருக்கோயிலின் வடபுறத்தில் உள்ள குளத்தில் நீராடுக; பிணிபோகும்'' எனத் திருவருள் புரிந்தார். அது கேட்ட சுந்தரர் இறைவனைத் துதித்து வடகுளமாகிய தீர்த்தத்திற்குச் சென்று மூழ்கினர். உடனே நோய் நீங்கப்பெற்றார். மேனி பொன்போல் ஒளி வீசிற்று. ஈரம் மாற்றி வேறு உடை அணிந்து திருத்துருத்தி நாதரை அடைந்து வணங்கினர். "மின்னுமா மேகங்கள்" எனத் தொடங்கும் ஏழிசைப் பதிகம் பாடினர். திருத்துருத்திநாதர் சொன்னவாறறிவார் என்ற திருப்பெயருடையவர். இத்திருப்பெயரைச் சுந்தரர், "சொன்னவாறு அறிவார் துருத்தியார்" என்று அருளிச்செய்துள்ளார். மேலும் சொன்னவாறு அறிவார் திருவருளால் தாம் உடல் நோய் நீங்கப் பெற்றமையை "என் உடம்பு சுடும் பிணி இடர் கெடுத்தானை" என (அகச்சான்றாக) அருளினர். மூவர் பாடலும்பெற்றது திருத்துருத்தி. இத்தலத்தில் தான் ஞானசம்பந்தர் "மறக்குமாறு இலாத என்னை மையல்செய்து இம்மண்ணின் மேல் பிறக்குமாறுகாட்டினாய்" எனத்

தம் பிறவிக்கு இறையருள் காரணமாக அமைந்தமையை ஆதாரமாகக் காட்டியுள்ளார் – இங்ஙனம் பல கருத்துக்களைத் திருத்துருத்தித் தலவரலாறு, மற்றும் சிறப்புக்களாக அருளிச்செய்து மனம் கொள்வித்தார்கள்.

தொண்டர் சூழத் திருத்துருத்தியினின்றும் புறப்பட்டார். இடையிலுள்ள பல திருத்தலங்களையும்வணங்கினர். திருவாரூர் தம் எதிரே தோன்றக் கண்டார். தலத்தை ஒரு கண்ணினால் கண்டார். அவர் மனம் நிறையவில்லை; பொழுது மயங்கும் மாலைப் பொழுதில் தலத்தின் உள்நுழைந்தார். திருப்பரவையுண்டமலி என்னும் திருக்கோயிலைச்சார்ந்தார். "தூவாயா தொண்டுசெய் வார் படுதுக்கங்கள் காவாயர" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடி வணங்கினர். "கண்தனைக் கொண்டு, இட்டுக் காட்டாயே" என வேண்டினர். பிறகு தொண்டர் உடன்வரத் திருவாரூர் மூலட்டானத்து இறைவனை அர்த்தயாமகாலத்தில்சென்று வணங்க எழுந்தருளினர். அப்போது சிவனடியார்கள் தம் எதிரில் வரக்கண்டார். அயலாரை வினவுவதுபோலக் கைக்கிளை என்னும் அகப்பொருள்துறை அமையக் 'குருகுபாய' எனத் தொடங்கிப் பதிகம் பாடினர். "உணர்த்த வல்லீர்களே" என்ற நிறைவு கொண்டது இத்திருப்பதிகம். கிள்ளை, பூவை, வெண்ணுரை, சக்கிரவாகப்பேடை, சேவல். வண்டு, குருகு, அன்னம், குயில் முதலியவைகளை வினவுவதுபோலப் பாடியருளப் பெற்றது இது. இப்பதிகம் பாடியவாறே அடியார்களுடன் கலந்து தேவாசிரியமண்டபம் சேர்ந்தார். பின் பூங்கோயில் தொழுதார். பூங்கோயிற் பெருமானைத் தமக்கு வலக்கண் தருமாறு வேண்டினர். "மீளா அடிமை" எனத் தொடங்கிப் பதிகம்பாடினர். தமது அடிமைத் திறத்தையும்தோழமை உணர்வையும் உணர்த்துவதாக அமைந்தது இப்பதிகம். "நான் உனக்கு மீளாத அடிமை; பிறரை விரும்பாமல் உமக்கே ஆளானேன்; தொண்டர்கள் படும் துன்பங்களை நீர்தரிக்க மாட்டீர்" என்னும் கருத்துடன் பாடி "யான் ஒரு குற்றமும் செய்யாத போதும் அடிகேள் எற்றுக்கு எம் கண் கொண்டீர்? நீரே பழிபட்டீர்! மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால்வாழ்ந்துபோதீர்" என்ற கருத்தமையத்தோழமை உணர்வுடன் பாடி, வலக்கண் தரவேண்டினர். சேக்கிழார் இந்நிகழ்ச்சியை "ஆளாம் திருத்தோழமைத் திறத்தால் அஞ்சொற்பதிகம் பாடினர்" எனக் குறித்தருளினர். புற்றிடம் கொண்ட பெருமான் சுந்தரரிடம் இரக்கம் காட்டினர்; இறைவன் வலக்கண் பார்வையினைத் தந்தார். சுந்தரர் பரவசமானர்! ஆடிப்பாடினர்! பூங்கோயிலை வலம்வந்தார். மீண்டும் தேவாசிரிய மண்டபம் சார்ந்தார்.

நம்பியாரூரர் திருவாரூர் அணைந்தவுடன் அவரது பரிசனங்கள் பரவையார் வதியும் திருமாளிகை அடைந்தனர். பரவையார், சுந்தரர் ஒற்றியூரில் சங்கிலியாரை மணந்தமையை மனங்கொண்டு

சுந்தரர் பரிசனங்களைத் தம் மாளிகையில் புகாதவாறு தடுத்தார். இச்செய்தி சுந்தரருக்கு எட்டியது. பரவையார் ஊடல்கொண்டமை அறிந்தார். உலகியல்பு கற்ற மாந்தர் சிலரைத் தீர்வுகாண அனுப்பி வைத்தார்; பயன் விளைந்திலது. சுந்தரர் சோர்ந்தார்! நடு யாமம்! அடியார்கள் துயின்றனர். சுந்தரர் சிவபெருமானை எண்ணினர்! "தேவரீர்! இந்த அர்த்தயாமத்தில், யான் பரவையார்பால் சேர நினைவீர்! பிணக்கைத் தீர்த்தால் உய்வேன்! பின்னை இல்லை செயல்" என் வேண்டினர். திருமாலாலும் காணப் பெருத திருவடிகள் நிலந்தோயச் சிவபெருமான் சுந்தரர்முன் எழுந்தருளினர். சுந்தரர் மகிழ்ந்தார்; தொழுதார்! "என் நீ உற்றது?" என வினவினர் பெருமான்! சுந்தரர் உற்றது உரைத்தார். "நீரே அருள்செய்யச் சங்கிலியை மணந்தேன். மணந்த திறங்கேட்டுப் பரவை ஊடல் கொண்டார்; நீர் எனக்குத் தாயின் நல்ல தோழருமாம் தம்பிரானரே ஆகில் பரவை கொண்ட புலவிதீர்த்துத் தாரும்" என வேண்டினர்.

பெருமான் பரவையார் மனை சார்ந்தார்! சிவவேதியர் வடிவம் கொண்டு சென்றார்! மாளிகை முன்பு நின்று "பரவையே! கதவம் திறவாய்" என அழைத்தார். பரவையார் விழித்திருந்தார்; பதைப் போடு வந்து கதவு திறந்தார். சிவவேதியர் வடிவத்தாரைத் தொழுது, வந்த காரணம் வினவினர். "இசைந்தால் உரைப்பேன்" என்றார் பெருமான்! "வந்த காரியம் இன்னதென்று உரைக்கில் இசைவதாயின் இணங்குவேன்" என்றார் பரவையார்! பெருமான் வந்தகாரியம் உரைத்தருளினர். "நீர் இதற்கென இங்கு வருவது உம் பெருமைக்குத்தகாது; ஒற்றியூர்உறுதி பெற்றவர் இங்கு வருதற்கு இசையேன்! நீரும் போம்" எனப் பரவையார் மறுத்தார்.

தூது சென்ற பெருமானை எண்ணியவாறு மனக் கலக்கம் எய்தியிருந்த சுந்தரர், பெருமான் வருகையை எதிர்நோக்கி யிருந்தார். அர்ச்சகர் வடிவம் எய்திநின்ற பெருமான் தாமாம் தன்மையுடன் பேரொளி தோன்றச் சுந்தரர் முன் வந்தார்! சிறிதே முறுவல் கூடினர்! சுந்தரர், 'புலவிதீர்ந்தது' எனக் கருதினர். பெருமான் நிகழ்ந்தன மொழிந்தார்; பெரிதும் வருந்தினர் சுந்தரர்! பெருமானை நோக்கி அவர்தம் அருட்செயல்களை எடுத்தோதினர். மேலும், "நுடங்கிடை அவள்பால் சென்று மேவுதல் செய்யீராகில் விடும் உயிர்!" என்று வீழ்ந்தார். உயிர் விடுவேன் எனக் கூறிய சுந்தரரைக் கண்டு அருள்கொண்டார் பெருமான்! மீண்டும் ஒரு முறை பரவையார் மனை நோக்கித் தூதுசெல்ல எழுந்தருளினர், சுந்தரர் பெருமான்பின் சிறிது தூரம் சென்று மீண்டார்.

இங்ஙனம் ஆம்போதில், பரவையார், சிவவேதியராய்த் தூது வந்தவர் சிவபெருமானே என மனம்பற்றினர்; தம் செயலுக்கு

வருந்தினர். துயில்கொள்ளாது இருந்தார்! தோழியரிடம் இது பற்றிக் கூறி மனமழிந்தார். அச்சமயம் பெருமான் முன்போலச் சிவவேதியர் வடிவம் கொள்ளாது தாமாம் தன்மை தோன்றப் பரவையார் மனைசார்ந்தார். பரவையார் மனை கயிலாயம் ஆயிற்று. பரவையார் எதிர்கொண்டு வணங்கினர். பெருமான் வந்தகாரியம் உரைத்தார். பரவையார் முன்பு வேதியராய் எழுந்தருளிய போது தாம் செய்த பிழைபொறுக்க வேண்டினர். புலவி தீர்ந்தார்; இசைந்தார். பரவையார் புலவி தீர்ந்த இந்நிலையைச் சேக்கிழார்,

"துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பம் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம் வருந்தஓர் இரவு மாருது
அளிவரும் அன்பர்க் காக அங்கொடிங் குழல்வீராகி
எளிவரு வீரு மானல் என்செய்கேன் இசையாது? என்ருர்."

என விளக்கிப் பாடியுள்ளார்.

பெருமான் பரவை செயலைப் பாராட்டினர். சுந்தரரிடம் திரும்பினர். பரவை உடன்பட்டமை கூறினர். சுந்தரர் செய்தி கேட்டு, "போகமும் மோட்சமும் உயிர்கட்கு அருள்கின்றவர் நீர்! இனிஎனக்கு என்னகுறை?" எனக்கூறிப் பெருமானைப் போற்றினர்; "பரவைபால் செல்க" என்ருர் பரமன். சுந்தரர் சிவபெருமானுடன் சென்று வழிபட்டு, வணங்கி, அருள்விடை பெற்றுப் பரவை மனை சார்ந்தார். சுந்தரர் திருக்கோயில் சென்று வழிபட்ட பின்னரே பரவைமனை சார்ந்தார் என்பதைச் சேக்கிழார் "தம்பிரான்பின் சென்று தாழ்ந்து எழுந்து அருளால் மீள்வார்" எனக் குறித்துள்ளார் என்பதுவரை அன்றைய அருளுபதேசமாக மலர்ந்தது.

பெரிய புராணத்தில் நுட்பமான மூலப் பகுதிகளை இடையிடையே சுட்டியும் தலவரலாறு, பதிகவிளக்கம் அருளியும் சாத்திர நுட்பங்கள் திருமுறைகளில் பொதிந்து கிடக்கலை எடுத்துக் காட்டியும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் செறிவுமிக்க அருளுபதேசம் செய்தருள்கின்றமை கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் களிப்பும் அறிவும் நல்கும் சீருடைத்தாய் விளங்கிச் சிறக்கின்றது!

உபதேசம் நிறைந்தது! பனிக்காலம்! சூடான இன்சுவைத் தேநீர் இதமாகஅளிக்கப்பெற்றது; பருகி மகிழ்ந்தோம்! பரமனருள் சிந்தித்தவாறே இல்லம் ஏகினேம்!

ஆரூரில் சுந்தரர்க்காக அடிதோயத் தூதுசென்ற
சீருடையார் கழல்போற்றும் செய்யகுரு அருள் போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் சிவதலச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரபவ-தை-ஆயில்யத் திருநாள் 3—2—88 புதன்கிழமை காலை தரங்கம்பாடி (அளப்பூர், ஸ்ரீ மாசிலாமணீசர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. தரங்கம்பாடி (அளப்பூர்) 'ஸ்ரீ மாசிலாமணீசர் திருக்கோயில் தேவாரம்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ., தலச்சிறப்புகளை விளக்கி உரையாற்றினார். அன்பர்கள் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிறு தோறும ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. இம்மாதம் 80 ஆவது அருளுபதேசம் 7—2—88 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்த சமயவிளக்கம் செய்தருள்கின்றார்கள். இம்மாதம் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தை நிறைவுசெய்து திருமூலர் வரலாறு அருளினார்கள். ஏயர்கோன்கலிக்காமரின் திருமனைவியாரின் வழிபாட்டு நெறியைப் புலப்படுத்தியும்சுந்தரரையுப், ஏயர்கோன்கலிக்காமரையும்இணைத்த இறைவன் அருளிச்செயலை வியந்து ஓதியும மனமகொள விளக்கினார்கள். இறைவன், ஏயர்கோனுற்ற இருமபிணி தவிர்த்தமையைச் சுந்தரர் புன்கூர்ப் பதிகத்தில் சுட்டியுள்ளமையைச் சான்றாக அருளினார்கள். அரிய சிந்தனைகளும் இனிய தேவார விளக்கமும் பொருந்தியதாக அருளுபதேசம் அமைந்து சிறந்தது.

மயிலாடுதுறை அன்பர்களும், பக்தர்களும் ஆசிரியர்களும் அலுவலர்களுப், மாணவர்களும கலந்துகொண்டு பயனுற்றனர். அடுத்து 81 ஆம அருளுபதேசம் 6—3—88 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

தருமை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதத்தை வழிபாட்டிற்குரிய மாதமாக நம் முன்னோர்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே முன்னோர்கள் சைவ–வைணவத் திருக்கோயில்களில் வைகறைப்போதில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டையும் சிவன் கோயில்களில் திருவாதிரைப் பெருவிழாவையும் திருமால் திருக்கோயில்களின் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவையும் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். மார்கழி மாதம் தேவர்களின் விடியற் காலம் என்றும் அவ்விடியற் காலை வேளையில் இறைவழிபாடுசெய்து இறையருள் பெறவேண்டும் என்றும் கருதி மார்கழி மாத வழிபாட்டை நம் முன்னோர்கள் மேற் கொண்டுள்ளனர். "மாதங்களுக்குள் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்று பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறியிருக்கிறார் என்பது இம்மாதத்திற்கு மேலும் சிறப்புத் தருவதாகும். இம் மாதத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்வோர், இவ்வாண்டு முழுவதும் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்னோர்கள் முடிவு. அம்முறையிலே நம் நாட்டில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது.

தருமை ஆதீனத் திருக்கோயில்களிலும் மார்கழி மாத வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது. தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்தியருளுகின்றார்கள்.

பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கும் அருட்பிரசாதம் வழங்கி ஆசியருள்கின்றார்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும இறைவழிபாட்டு முறையை உணர்த்தவும், அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன்பெறச் செய்யவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பல தலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றியருளுகிறார்கள். மேலும் ஆதீனத் திருக்கோயில்களுக்கு எழுந்தருளும்போது ஆதீன உயர்அலுவலர்களையும்

உடனழைத்துச்சென்று ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடச் செய்து நெறிப்படுத்தியருள்வதும் குறிப்பிடத் தக்கது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின் போது உலக நலங்கருதி சுவாமிக்கும், அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்றுகிறார்கள்.

சோழநாட்டைச்சிவாலயமாகக்கொண்டு வழிபடும் முறையில் மத்தியார்ச்சுனம் என வழங்கும் திருவிடைமருதூர்த் திருக்கோயிலை சிவத்தலமாகவும், சூழவுள்ள திருவலஞ்சுழியை விநாயகர் தலமாக வும், சுவாமிமலையை முருகன் தலமாகவும், திருவாவடுதுறையை நந்தி தலமாகவும், திருஆலங்குடியைத் தட்சிணாமூர்த்தி தலமாக வும், சிதம்பரத்தை நடராஜப் பெருமானுக்குரிய தலமாகவும், சீகாழியைப்பைரவர்தலமாகவும், திருஆடிப்பாடியைச்சண்டேசுவரர் தலமாகவும் சூரியனார்கோயிலை நவக்கிரகத் தலமாகவும் கொண்டு விளங்கும் தலங்களையும் வழிபட்டருளினார்கள்.

வழிபாடாற்றிய தலங்கள் :

16—12—87 மார்கழி முதல் நாள் புதன்கிழமை ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில், மயிலாடுதுறை ஸ்ரீ மயூரநாத சுவாமி திருக்கோயில் 17—12—87 வியாழக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்தி திருக்கோயில் 18—12—87 வெள்ளிக் கிழமை திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில் 19—12—87 சனிக்கிழமை தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக் கோயில்20—12—87 ஞாயிற்றுக்கிழமை கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்தி புரீசுவரர் திருக்கோயில் 21—12—87 திங்கட்கிழமை திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயில், திருவலஞ்சுழி, சுவாமிமலை திருக்கோயில்கள், 22—12—87 செவ்வாய்க்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் 23—12—87 புதன்கிழமை திருவிளநகர் ஸ்ரீ துறை காட்டும் வள்ளலார் திருக் கோயில் 26—12—87 சனிக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருக்கோயில், 27—12—87 ஞாயிற்றுக்கிழமை திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணேசுவரசுவாமி திருக்கோயில். சூரியனார் கோயில், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் 28—12—87திங்கட்கிழமை திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயில், ஆலங்குடி காசியாரண்யேசுவரசுவாமிதிருக்கோயில், 29—12—87 செவ்வாய்க்கிழமை திருநின்றியூர் ஸ்ரீ லட்சுமிபுரீசுவர சுவாமி திருக்கோயில், திருப்புன்கூர்த் திருக்கோயில் 30—12—87

புதன்கிழமை கழனிவாயில் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி திருக்கோயில், 31—12—87 வியாழக்கிழமை திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரங்கநாதசுவாமி திருக்கோயில், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், 1—1—88 வெள்ளிக்கிழமை, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயில், 2-1-88 சனிக்கிழமை ஸ்ரீவரசித்திவிநாயகர் திருக்கோயில், மயிலாடுதுறை ஸ்ரீ கண்கொடுத்த விநாயகர் திருக்கோயில், 3—1—88 ஞாயிற்றுக்கிழமை திருப்பறியலூர் (பரசலூர்) ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில், 4—1—88 திங்கட்கிழமை சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில், (ஆருத்ராதரிசனம்) திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) ஸ்ரீசிவலோகத்தியாகராஜ சுவாமி திருக்கோயில் 5—1—88 செவ்வாய்க்கிழமை திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயில், திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில், 6—1—88 புதன்கிழமை தருமை ஆதீனம் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருமூர்த்த ஆலயம் (குருபூஜை) 7—1—88 வியாழக்கிழமை திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில், 8—1—88 வெள்ளிக்கிழமை சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி திருக்கோயில், திருமுல்லைவனநாதர் திருக்கோயில், விளத்திடசமுத்திரம் ஸ்ரீக்ஷிப்ரப்ரசாதகணபதி திருக்கோயில், 9—1—88சனிக்கிழமை திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி திருக்கோயில், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி திருக்கோயில், 10—1—88 ஞாயிற்றுக்கிழமை, திருத்துருத்தி (குத்தாலம்) ஸ்ரீஉக்தவேதீசுவரர் திருக்கோயில், 11—1—88 திங்கட்கிழமை திருநெடுங்களம் ஸ்ரீ நித்தியசுந்தரேசுவரர் திருக்கோயில், திருக்கற்குடி (உய்யக்கொண்டான்மலை) ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானசுவாமி திருக்கோயில், 12—1—88 செவ்வாய்க்கிழமை திருச்செம்பொன்னூர் கோயில், ஸ்ரீ குமரக்கோவில் 13—1—88 புதன்கிழமை மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், 14—1—88வியாழக்கிழமை, திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் திருக்கோயில், திருச்சேய்ஞலூர் ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில், திருஆப்பாடித்திருக்கோயில் 15—1—88 வெள்ளிக்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயில். ஆகிய திருத்தலங்களில் சிறப்பு வழிபாடு ஆற்றினார்கள்.

தருமை ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருப்பனந்தாள் தலவழிபாட்டிற்கு எழுந்தருளியபோது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர், கயிலைமாமுனிவர் ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வரவேற்று வழிபாடு

ஆற்றினார்கள். அன்பர்கள் தரிசித்துக் குருவருட்பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

வைத்தீசுவரன் கோயிலில் தைச்செவ்வாய்த் திருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் எனவழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 31—1—88 முதல் 9—2—88 முடிய மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் காலை மாலை விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. 8—2—88 திங்கட்கிழமையன்று திருத்தேர் விழாவும் 9—2—88 செவ்வாய்க்கிழமையன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச் செவ்வாய்த் தீர்த்தமும் நடைபெற்றன. தருமை ஆதீனக் கலைக்கல்லூரிப் பேராசிரியர்களும் புலவர்களும் முருகப்பெருமான் திருவருள் போற்றிய நக்கீரர், கச்சியப்பர், அருணகிரிநாதர், சிவஞான தேசிகர், குமரகுருபரர், சிதம்பர சுவாமிகள், பகழிக் கூத்தர் முதலிய அருளாளர்கள் பற்றி நாள்தோறும் மாலை 7-00 மணி அளவில் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர்கள் முருகப் பெருமானைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசார நிலயத்தினரின் மாத வழிபாடு

31—1—88 ஞாயிறு காலை சமயப் பிரசார நிலய மாதவழிபாடு சென்னை ஆத்தூர் திருநகரியில் அமைந்துள்ள அருள்மிகுசிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புற நடைபெற்றது.

வழிபாட்டின்போது திரு. சாமி. தண்டபாணி ஓதுவார், திரு. இராமமூர்த்தி ஐயர் ஆகியோர் திருமுறைப்பாராயணம்செய்தனர்.

திரு. வி. என். ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. என். இராமமூர்த்தி ஐயர் திருமுறைப் பாராயணத்தால் வரும் பயன்களை எடுத்துரைத்தார்.

ஆலயப் பொருளாளர் திரு. சி. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்புரை கூறினார். பின்னர் நிலையம் சூப்பிரன்டெண்ட் திரு. சீனி. திருநாவுக்கரசு நன்றியுரை கூறினார்.

அன்பர்கள் அனைவர்க்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(பிரபவஸு மாசிமீ 1வ முதல் 30வ முடிய)
(13—2—1988 முதல் 13—3—1988 முடிய)

பிரபவஸு மாசிமீ 1வ ஸ்திரவாரம் மூல நக்ஷத்திரம் பவ கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 7 நாழிகை 55 விநாடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மகர ராசியிலிருந்து கும்ப ராசியில் சங்கிரமணமாக மாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். சங்கிரமண கால கிரகஸ்திதியினால் லோக பிரஜைகளுக்கு சம்ரட்சகம் ஏற்படும். மக்களின் ஆக்கத்தொழில்களுக்கு ஈஸ்வர செயலில் உபாயங்கள் பல உண்டாகும். நாடுகளில் கனிவளத்திற்காக முஸ்தீப்பு ஏற்பாடுகள் செயல்படும். நாடுகளில் எங்கும் சிறு தொழில் நிறுவனங்கள் ஏற்பட்டு, பிரஜைகள் பல துறையிலும் ஊக்கமிகுதியில் உழைப்பு மிகுந்தவர்களாகி, பொருளீட்டி வருவர். தேசங்களில் எங்கும் ஆன்றோர்கள் சிவபுண்ணியமாகச் சீரிய தொண்டாற்றுவர். சமூக நலன்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்வார்கள். ஈஸ்வர அனுக்கிரகத்தினால் தர்மங்கள் சிவாலயத் திருப்பணிகள் மடங்கள் தீர்நிலைத் தடாகங்கள் நிர்மாணித்தல் ஆகிய புண்ணிய கைங்கர்யங்களைச் செய்வார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாகச் சிவத்திருமேனிப் பொலிவில் வந்து ஈஸ்வரசித்தம் நிறைவுறச் செய்கின்ற சிவராஜயோகத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் மூலமாக மாந்தருக்குச் சிவசமய நெறிமுறையினைப் போதித்து அருள்வார்கள். சிஷ்யகோடிகளுக்கு ஞான தீட்சை செய்து ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிறப்பொடு பூசனைகள் நடந்துவரும். பக்தகோடிகள் ஈஸ்வரனைத் தரிசித்து நிஷ்களங்கத்தினால் அமைதியுற்றுச் சீரிய வாழ்க்கை நடத்துவர்.

பிரபவஸு மாசிமீ 20வ (3—3—88) குருவாரம் அன்று பௌர்ணமி பூர நக்ஷத்திரத்தில் சம்பவிக்கும் ராகுகிரஸ்தம் கிருஷ்ண வர்ணப் ஆக்னேயபர்வா, சோமோபராக புண்ணியகாலம். ஸ்பர்ஸம் இரவு மணி 9-31 மதியம் 9-43 மோக்ஷம் 9-49 பரிமாணம் 0-03.

பரிமாணம் மிகவும் சொல்பம். அதன் பலன் பயிர்கள் விருத்தியாகும். மக்களுக்கு ஆரோக்கியம்தரும். அன்று பகல் 12 மணிக்குள் போஜனமும் மறுதினம் பௌர்ணமி சிரார்த்தமும் செய்யவேண்டும். மகம், பூரம், உத்திரம் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்துகொள்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதிகளில்கலைத்துறையில் விசேஷ நற்பலன் தரும். மார்ச்சு 8 தேதிக்கு அரசாங்கத்திலிருந்து ஓர் நற்செய்தி வரும். நல்லன நடக்கும். குல சம்பிரதாயங்களில் அவசிய செலவினங்களை ஏற்று வைராக்கிய போக்கில் நடத்தி வரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மார்ச்சு 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வெகுவாக வந்து சேரும். தர்மங்கள் பொதுநலன்களில் கணிசமாக நற்செலவுகளை ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் மார்ச்சு 8 தேதிக்கு, சிந்தனைப்படிக்கு உள்ள எல்லாம் திருப்தியாக நடக்கும். அரசாங்கத்திலிருந்து நல்லனஏற்பட்டுவரும். ஓர்சிறு விபத்தின்று தப்பச்செய்யும். தாரபுத்திரர்களுக்குச்சௌக்கிய பலன் தரும். பிப்ரவரி 13, 14 மார்ச்சு 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் கெடியான தோரணைக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் நல்லசந்தர்ப்பவாய்ப்புகளை உண்டு பண்ணும். நல்ல வாகனம் தரும். தெய்வதரிசனம் நல்லோர் பிரபலஸ்தர்கள் போற்றுதல் ஆகிய நற்பலன்களையளிக்கும். எல்லாக்காரியங்களும் பெருமதிப்பில் நடந்துகொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கும் சுமுகமும் கலந்துகாணும். பிப்ரவரி 15, 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வரவாகிக் கொண்டிருக்கும். மார்ச்சு 8உ க்கு அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். ஓர் அரிய காரியத்தைத் துவக்கும். வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெயம்தரும். இதன்முன் இருந்த கும்பவாயு போன்ற நலிவு நீங்கும். தீர ஆலோசித்தும் அழுத்தமானதுமான கருத்துக்களை வெளிப்படுத்துதல், நூல்கள் தொகுத்தல்ஆகும்.

தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்றஸ்திதி ஏற்படும். வீடுவாகனப் பிராப்தியில் முன்னேற்றஸ்திதி ஏற்படும். வயிற்றில் வாயு அஜீர்ணம் ஏற்பட்டுக் குணமாகும். மார்ச்சு 2 தேதிக்கு ஓர் கணிசமான பொருள் கைக்குவரும். எல்லாக் காரியங்களும் இஷ்டசித்தியாக நடக்கும். இதுவரையில் பிரிந்திருந்தவர் ஒன்று கூடுவர். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் வெகுவாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் கௌரவமும் பிரபலஸ்தர் போற்றுதலும் ஆகும். மார்ச்சு 8 தேதியில் அரசாங்க நன்மை ஏற்பட்டுவருவதினின்றும் மனம் உற்சாகமாதல், கல்வி கலைகளில் பிரகாசமாதல் ஆகும். எல்லாக்காரியங்களிலும் நன்மை ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அன்புக்குரியவர் ஒருவர் சிறிது காலம் பிரிந்திருந்து கூடுவர். பிப்ரவரி 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பண வருமானம் கணிசமாகவும். ஓர்புதிய வாகனம் வாங்குதல் ஆகும். ஓர் இயந்திர சாதனம் அனுபோகத்துக்கு வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் முன்னேற்ற ஸ்திதியாகும். எழுத்து மூலங்களில் ஒப்பந்தலேவாதேவிகளில் நல்லன ஏற்பட்டுவரும். எல்லாக்காரியங்களும் மதிநுட்பமுடன் நடந்து கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வரவும் செலவும் சமனாகும். வாக்குப் பலனில் சாஸ்திர நியமநெறி மேற்கொள்ளும் போதனைசெய்யும். மற்றும் நேர்மை, உறுதி, செயல் களை வற்புறுத்துதலினின்றும் மற்றவர் மனக்கசப்புறுவர். ஆயினும் குறிப்பிட்ட செயல்கள் நடந்து கொண்டிருக்கும். மார்ச்சு 8 உக்கு அரசாங்க உத்திரவில் மேன்மை அளிக்கும். நவீன பொருள்

இயந்திர சாதனம் வாங்குதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம், திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானம் வெகுவாக வரும். பொன்மணி பூஷணம் தரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் உயர் அந்தஸ்து, மேடை பிரசங்க கீர்த்தியளிக்கும். பசு பால் கறவை விருத்தியாகும். புத்திரர்களின் கல்வி கலைகள் தொழில்கள் மேலோங்கும். சுபம் தரும். தாம்பத்திய வாழ்வில் சொகுசு நிலவும். எல்லாக்காரியங்களும் மதிநுட்பத்தினல் திறப்படச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். பிப்ரவரி 28, 29 மார்ச்சு இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும் பணவருமானம் சரளமாக வரும். ஓர் ஆபரணம் தரும். ஓர் எதிர்ப்பு விஷயத்தில் நரம்பு வியாதி போன்ற ரோகத்தில் இக்கட்டான ஓர் நிலையும் ஆபத்தும் வந்து தப்புதல் ஆகும். மார்ச்சு 8உக்குப் பிறகு நல்ல சௌகரியமும் எழுத்து மூலங்களில் அரசாங்க அனுகூலங்களும் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பணவருமானம் கௌரவ ஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். மார்ச்சு 2உக்கு ஓர் ஆபரணம் தரும். நல்ல சுக சௌகரியம் தரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்திப்பலன் ஏற்படுத்தித் தரும். வித்தியா வியாபாராதிகளில் விளம்பரமும் முதலீடும் செய்யும். புத்திரர்களுக்குப் பாகங்கள் பிரித்தல் ஆகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மார்ச்சு 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பணவருமானம் நல்ல விதத்தில் வரவாகும். குடும்ப நலம் நன்ருக இருந்துவரும். தெய்வ தரிசனம், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, மகிழ்ச்சியளிக்கும் சம்பவம் நிகழும். அரசாங்க கௌரவம் தரும். தொழில் துறைகளில் முதலீடு செய்தல், மனைவி புத்திரர்களுக்கு வருங்கால நிதி செய்து வைத்தல் ஆகும். அனைத்துச் செயல்களும் உறுதியில் நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

பெருமான் பிரிவதில்லை

ஆண்டவன்பெரியவன்; தெய்வீகமானவன்; அவனது ஒப்பற்ற இயல்பு, சிந்தனைக்குச் சிக்காதது; அவன், சூட்சமப் பொருள்கள் அனைத்திலும் சூட்சம மானவன். அவன் பல வகையிலும் சுடர் விடுகின்றான்; அவன் தூரத்துக்கு அப்பால் தூரமானவன்; அவன் நம் உடலுக்கு உள்ளேயும் சமீபத்திலும் உள்ளான்; கண் திறந்து பார்க்கும்மக்களுக்கு அவன்இங்கேயே உள்ளான்-இதயத்திற்கு உள்ளும்உள்ளான். அவன்கண்களால் காணப்படாதவன்; பேச்சால் புரியப்படாதவன்; மற்ற புலன்களாலும் புலப் படாதவன்; கிரியைகளால் கிட்டப்படாதவன். ஆனால் எவனுடைய அறிவு, மெய்ஞ்ஞான ஒளியினாலே தூய்மைப் படுத்தப் படுகிறதோ, எவன் ஒருவன் அவனைத் தியானத் தாலே காண்கிறானோ அவனை விட்டுச் சற்றும் பெருமான் பிரிவதில்லை.

— முண்டக உபநிஷத்.

★

ஜேம்ஸ் ஏலன் சிந்தனைகள்

கண்ணியத்தில் தன்னை நிறைவு செய்து கொண்ட ஒரு மனிதன் எவரிடமும் எப்பொழுதும் சண்டை போட மாட்டான்.

★

சுய நலவாழ்விலே ஒருவனது உணர்ச்சியே முதன்மை வகிக்கிறது. அதைப்போலவே உயர்நிலை வாழ்விலே அவனது அமைதிநிலை முதன்மை வகிக்கிறது.

★

தூய்மையான வாழ்வை விரும்பும் ஒரு மனிதன் தினசரி தன் மனத்தினைப் புதுப்பித்துக் கொள்ளுகிறான்.

★

முட்டாள் மாந்தர்கள் தம் தவறுகளுக்காகவும், குற்றங்களுக்காகவும் பிறரை நோவார்கள். ஆனால் உண்மை நாட்டம் கொண்டோரோ தங்களைத் தாமே நோவார்கள். தம் ஒழுக்கத்திற்குத் தாமே முழுப்பொறுப்பு என்பதை அவ்வுயர்ந்தோர் ஒப்புவார்கள்.

GNANASAMBANDAM MAGAZINE

Statement about the ownership and other Particulars of the magazine

Form IV

1.	Place of publication	–	Dharmapuram
2.	Periodicity of its Publication	–	Monthly
3.	Printer's and Publisher's Name	–	V. Ramaiah Pillai
	Nationality	–	Indian
	Address	–	West Street, Dharmapuram, Mayiladuthurai - 609 001.
4.	Editor's Name	–	Vidwan Srimath Ramalinga Thambiran Swamigal
	Nationality	–	Indian
	Address	–	Velur Devasthanam, Vaithiswarankoil - 609 117.
5.	Names & addresses of Individuals who own the Newspaper, and Partners or shareholders holding more than one percent of the total Capital		**His Holiness Sri-La-Sri Shanmuga Desika Gnana sambanda Paramacharya Swamigal Avl** Dharmapuram Adhinam Dharmapuram Mayiladuthurai - 609 001, Tamil Nadu.

I. V. Ramaiah Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(S-d) V. RAMAIAH PILLAI,
Publisher.

Date 10–2–1988.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV
பாடம் - 1.

பண்டார சாத்திரங்கள்:

சிவபோக சாரம்

வித்துவான்
திரு. வி. சா. குருசாமி தேசிகர்

தருமை ஆதீன ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் அவர்களுக்குப் பின் ஆதீன ஞானபீடத்தில் எழுந்தருளி விளங்கிய மகாசந்நிதானங்களும் அருளிய நூல்கள் தருமை ஆதீன பண்டார சாத்திரங்கள் என வழங்கப்பெறும்.

பண்டாரம் என்ற சொல்லுக்குக் கருவூலம் என்பது பொருள் ஆகும். இறைவன் திருவருளாகிய மெய்ஞ்ஞானக் கருவூலத்தைத் தேக்கி வைத்துச் சீடர்களின் பரிபாக நிலைக்கேற்ப வழங்கலின் மகாசந்நிதானங்களைப் பண்டாரசந்நிதிகள் (சந்நிதி – வாயில்) எனவும் அவர்கள் அருளிய அருள்நூல்களைப் பண்டார சாத்திரங்கள் எனவும் வழங்குவர் பெரியோர்.

தருமை ஆதீன பண்டார சாத்திரங்களில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய நூல்கள் எட்டு. அவைகளில் ஒன்றாக விளங்கும் சிவபோகசாரம் தமிழக மக்கள் பலராலும் ஓதப் பெற்று வரும் சிறந்த சாத்திர நூலாகும். சைவசித்தாந்த ஞானத்தை இந்நூல் எளிய முறையில் திரட்டித் தருதலின் பதினெண் சித்தர் ஞானக் கோவையில் இந்நூலையும் சேர்த்து மக்கள் பயின்று பயன்பெற்றனர். முழுவதும் வெண்பா யாப்பில் அமைந்த 139 பாடல்களைக் கொண்ட இந்நூலைக் கற்போர் சித்தாந்த தத்துவக் கொள்கையின் சிறப்பையும் பயனையும் உணர்வர்.

சிவபோகம் என்பது ஆன்மா மும்மலங்களின் நீங்கிச் சிவானந்த வெள்ளத்தில் திளைத்து இன்புறுதலைக் குறிக்கும். 'பிரியா இருள், அருளால் நீங்க இன்பாய்த் துன்றல் சிவபோகம்' என்பர் இந் நூலாசிரியர். சாரம் – முடிந்த பயன். சிவபோகமாகிய முடிந்த பயனைக் கூறுவதால் இந்நூல் சிவபோகசாரம் எனப் பெற்றது.

குருவருள் :

இறைவன் குருவாகி வந்து அருள் புரியாவிடில் ஒருவருக்கும் ஞானம் உண்டாக மாட்டாது என்பது சித்தாந்த சாத்திரங்களின் சீரிய துணிபாகும். மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலவும், மீனைக்காட்டி மீனைப் பிடிப்பது போலவும் இறைவன் மும்மலமுடைய சகலான்மாக்களை ஆட்கொள்ள மானுட வடிவில் வந்தருளுவான் என்பது சாத்திர நூல்களின் முடிபாகும். இம்முறையில் தம்மை ஆட்கொண்டருளும் குருநாதரைச் சீடர்கள் உணர்ந்து சிவமாகவே கருதுதலை ஞான நூல்கள் பலவற்றிலும் காணலாம். குருஞான சம்பந்தர் தம்மை ஞானாசிரியனாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளிய கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரைச் சிவமாகப் போற்றி அதன் வழியே குருவின் பெருமையை இந்நூலில் 20 க்கு மேற்பட்ட பாடல்களால் அருளிச் செய்துள்ளார்.

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் கயிலாய பரம்பரையில் நந்தி மரபில் மெய்கண்ட சந்தானத்தில் வந்தவர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் மதுரைச் சொக்கேசன் ஆற்றுப்படுத்தியவாறு திருவாரூரை அடைந்து ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெறுகிறார். குருவருளால் சிவஞானமும் சிவானந்தமும்பெற்று இன்புறுகிறார். தம் அருளனுபவ நிலையைப் பல பாடல்களால் அருளிச்செய்கின்றார்.

இறைவன் நம்போல் குருநாதராக எழுந்தருளி வாராவிடில் நாம் உய்தி பெறமுடியாது என்பதைக் குருஞானசம்பந்தர்,

"ஆரறிவார் நீதிவழி ஆரறிவார் சித்திமுத்தி
ஆரறிவார் நற்றவங்கள் அன்பனைத்தும் — பாரெவர்க்கும்
கத்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனும்
அத்தன் என்போல் வந்திலன் ஆனல்."

என்ற பாடலால் குருநாதனே நீதிநெறிகளையும்சித்தி, முத்தி, தவம் அன்பு ஆகியவற்றையும் உயிர்கட்கு உணர்த்தி உய்திபெறச் செய்தருளுகிறார் என்று அறிவுறுத்துகிறார். இப்பாடலில் உலகியலுக்கு வேண்டற்பாலனவாகிய நீதிகளும், சித்திகளுமாகிய அவை தாமும் இறைவன் உணர்த்தினாலன்றி உயிர்கள் தாமே உணர்தற்கு இயலாதனவாகும். இதனைத் திருச்சாழலில் மணிவாசகர் சனகாதி நால்வருக்கு இறைவன் அறமுதல் நான்கை உணர்த்தாவிடில் அவர்கள் உலக இயற்கையை அறியாதவராயிருப்பர் எனக் கூறுதலாலும் அறியலாம்.

எவ்வளவு கற்றறிந்திருந்தாலும் குரு உபதேசத்தினாலேயே உண்மை ஞானம் வாய்க்கும் எனக்கூறும்,

“ சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்கும் நலம் வந்துறுமோ — ஆர்த்தகடல்
தண்ணீர் அருந்தினர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய் இதனைச் செப்பு. ”

என்ற திருக்களிற்றுப்படியாரப் பாடலுடன் ஒப்பிட்டு இன்புறும் வகையில்,

“ ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும் — குருவருளால்
வைத்தபடி இருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாம் தினம் ”

என்ற பாடலால் ஸ்ரீ குருஞானசம்பந்தர் நூல்களைக் கற்றலினால் மட்டும் ஒருவருக்குச் சிவஞானம் கைகூடிவிடாது. குருவருள் இல்லையேல் எத்தனை சித்திகளைப் பெற்றிருப்பினும் அவர்கள் இறை இன்பத்திற்கு உரியவர்களாகார் என்பதை உணர்த்தக்காணலாம்.

குரு தரிசனம் :

‘தெளிவு குருவின் திருமேனி காண்டல்’ என்பது திருமந்திரத் தொடர். குருதரிசனம் ஞானத்தைத் தரும் என்பது அதன் பொருளாகும். குருஞானசம்பந்தர் குருதரிசனத்தால் தமக்கு விளைந்த பயனை ஒரு பாடலில் இனிது விளக்கியுள்ளார்.

“ கண்டேன் இப்பாசம் கழிந்தேன் அமுதைமுகந்து
உண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன் — வண்டிமிர்காத்
தேனைப்பொழி கமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்ர காசனையே நான் ”

என்பதுதான் அப்பாடல்.

குரு நாதரைத் தரிசித்த அளவில் தமக்குச் சிவானந்தம் விளைந்ததை இப்பாடலில் குருஞானசம்பந்தர் விளக்கக் காணலாம். தம்மை நாடி வரும் வண்டுகள் உண்ணத் தேனைப் பொழியும் மலர்ச் சோலைகளை உடைய கமலை என்ற இயற்கை வருணனையில், தம்மை நாடிவரும் சீடர்கள் நுகரச் சிவானந்தத் தேனை வழங்கும் குருநாதர் வீற்றிருக்கும் இடம் என்ற சிறப்பும் உள்ளுறையாக அமைத்திருத்தலை அறிந்து மகிழலாம்.

குருவே சிவம் :

குருவும் சிவமும் வேறல்லர் என்பதையும், சிவபிரானே தம்மை ஆட்கொள்ள மானுட வடிவில் வந்துள்ளார் என்பதையும் விளக்கும் பல பாடல்களைச் சிவபோகசாரத்தில் காணலாம்.

அருவும், உருவும், அருவுருவும் அல்லாத சிவ பரம்பொருளே திருவாரூரில் ஞானப்பிரகாச குருநாதராக எழுந்தருளி வந்துள்ளார் எனவும், அரிய அயன் ஆகியோர்களால் அடியும்முடியும் காணப் பெருத பெரியவனே அக்குருநாதர் வடிவில் வந்துள்ளார் எனவும் கூறும் உள்ளிருந்து உணர்த்தி வந்த அப்பரம் பொருள் மெள்ள மனித உருவில் நம்மை ஆட்கொள்ளக் குருவாக வந்துள்ளது எனவும் பாடல்களை இந்நூலில் காணலாம்.

குரு உபதேசம் :

'தெளிவுகுருவின் திருவார்த்தை கேட்டல்' என்பது திருமந்திரம். குரு உபதேசம் நமக்குச் சிவஞானத்தைத் தரும் என்பது இத் தொடரின் பொருளாகும். சிவபிரான் குருநாதராகத் தோன்றியும் உபதேசித்தும் ஆட்கொள்ளும் இயல்பையும் சிவபோகசாரம் விளக்குகிறது.

"தேடும் திரவியமும் சிற்றறிவும் பற்றுதலும்
கூடும் பொய் என்றருளில் கூட்டினன் — நாடரிய
ஞானப்ர காசனுயர் நற்கமலை மாநகர்வாழ்
வானப் பிறையணிந்த மன் "

என்ற பாடல் குருஉபதேசப் பகுதியாக விளங்குவது. பிறையணிந்த பெருமானுகிய ஞானப் பிரகாச குருநாதன் செல்வம், யாக்கை, அவற்றை மெய்யென்றுணரும் புல்லறிவு, அவற்றிற் செலுத்தும் பற்று ஆகியன பொய் எனவும், திருவருள் ஒன்றுமே மெய் எனவும் காட்டி அவற்றினின்று என்னைப் பிரிவித்துத் திருவருளில் சேர்ப்பித்தார் என்பது பாடலின் திரண்ட கருத்தாகும்.

குரு உபதேசத்தால் உயிர்கள் சிவஞானத்திலழுந்தி இன்புறும் நிலை வாய்க்கும். அத்தகைய நிலை கைவரும் போது அதிலேயே திளைத்திருக்க வேண்டும் என்ற நினைப்பும் உலகியலில் மீண்டும் வாரா நிலை அருளவேண்டுமெனக் குருநாதரை வேண்டவும் தோன்றும்.

"ஒழியாத பேரின்பத் துள்ளாய் உலகில்
விழியா திருக்க அருள்"

எனக் குருஞானசம்பந்தர் தம் குருவிடம் வேண்டலால் இதனை நாம் அறியலாம்.

அருள் வேட்டல் :

தற்பெருமை பாராட்டல், பிறரை எள்ளி உரைத்தல், யான் என்னும் செருக்கு, வெகுளி, பொருள்கள் மேல் செல்லும் அவா, நல்வினை தீவினைகள் ஆகிய மல காரியங்கள் நீங்காத வரை இறையருள் பெற்று இன்புற்றிருக்கும் நிலை உயிர்கட்கு வாய்க்காது என்று கூறும் பாடல் நாம் நம்மைத் தூய்மை செய்து கொள்ள உதவும் அறிவுரையாய் இந்நூலில் விளங்குகிறது.

"ஒருமையுடன் ஈசனருள் ஓங்கி என்றும் தூங்கல்
அருமை அருமை அருமை — பெருமை இடும்(பு)
ஆங்காரம் கோபம் அபிமானம் ஆசைவினை
நீங்காத போது தானே"

என்ற பாடல் உயிர்கட்குப் பரிபாக நிலை கைவருதற்குரிய உபாயங்களைக் கூறுவதைக் காணலாம்.

இவ்வாறு குருஞானசம்பந்தர் குருவின் பெருமை, குருதரிசனத்தால் விளையும் நன்மை, குரு உபதேசத்தின் சிறப்பு, குருவருள் கிடைத்ததற்கு நாம் பரிபாகப் படுதல் முதலிய பல கருத்துக்களை உள்ளடக்கிய பாடல்களைப் சிவபோகசாரத்தின் முற்பகுதியில் தெரிவித்தருளுகிறார்.

சித்திநெறி :

'சிவத்துக்கு மேல் தெய்வம் இல்லை, சித்திக்கு மேல் நூல் இல்லை' என்பது பழமொழி. அருணந்தி சிவம் அருளிய சிவஞான சித்தியாருக்குத் தனி விளக்கம் கண்ட ஆதீனம் எனப் போற்றப் பெறுவது தருமை ஆதீனம். குருஞானசம்பந்தர் சிவஞான சித்தியாருக்கு ஞானவரண விளக்கம் என்ற பெயரில் விளக்க நூல் ஒன்றை அருளியுள்ளார். மேலும் சிவபோகசாரத்தில், முத்திநிலை எய்தவிரும்புவோர் சிவஞான சித்தியாரை முழுவதும் படித்துணர்தல் கூடவேண்டா, விருத்தப் பாவடியில் அமைந்த அந்நூற் செய்யுள் ஒன்றில் ஒரு பாதியை உணர்ந்தாலே போதும் என்று உரைத்தருள்கிறார்.

"ஆருறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
நீருக முத்திநிலை நிற்போர்க்குப் — பேருகப்
பார்விரித்த நூல்எல்லாம் பார்த்தறியின் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதிபோ தும்"

என்பது தான் அப்பாடல். தாயுமான அடிகள் குருமரபு வணக்கம் கூறும் பாடலில் குருஞானசம்பந்தர் அருளிய இச்சிவபோகசாரப் பாடல் கருத்திற் கியையப் 'பாதி விருத்தத்தால் இப் பாரனைத்தும் பொய்யென உண்மை சாதித்தார் பொன்னடியைச் சாரும் நாள் எந்நாளோ' என அருணந்தி சிவத்தைப் போற்றி உரைத்தருளு கின்ருர்.

மேற்கூறிய சிவபோகசாரப் பாடல், 'ஆணவம், கன்மம், மாயை ஆகியமுமமலங்களும் கெட்டொழிய முத்திநிலை ஒன்றையே பயனுகக் கருதி நிற்கும் தீவிர உணர்வுடையார்க்கு பாசநீக்கமும் சிவப்பேறும் ஆகிய இருவகைப் பயனும் கைகூடுதற் பொருட்டு, இவ்வுலகில் பலவாய்ப் பரந்து விரிந்து கிடக்கும் நூல்களை யெல்லாம் பார்த்து அறிவதைக் காட்டிலும் சிவஞான சித்தியாரில்வரும் ஒரு திருவிருத் தத்தில் பாதியை உணர்தல் ஒன்றே போதுமானது' என்பது பாடலின் பொருளாகும்.

குருஞானசம்பந்தர் கூறும் அச்சிவஞான சித்தியாரில் வரும் விருத்தம்,

"அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினல் அறியாதே அறிந்து
குறியாதே குறித்து அந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாம் தானுய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றும் தோன்றிடுவன் நிராதார ஞயே"

என்பதாகும். இப்பாடலின் முற்பாதியே குருஞானசம்பந்தர் சிவபோகசாரத்தில் ஓர் விருத்தப்பாதி எனச் சுட்டி உணர்த்தும் பாடற்பகுதியாகும்.

'அறியாமையாகிய கேவல நிலையையும், அறிவாகிய சகல நிலையையும் சிவஞானத்தால் நீக்கி, ஆன்மாவினிடத்துப் பரமான்மா வாய்ப் பிரிவற விளங்கும் சிவத்தை அருளினல் அறிந்து தற்போதத் தால் ஆராயாது அருளினல் ஆராய்ந்துதெளிந்து பின்கருவிகளோடும்

கூடி சகலப் படாமலும், கேவலப் படாமலும் அவ்வருளோடு கூடி நிட்டை நிலையில் நின்றால், பெத்த நிலையிலே ஆன்மாவோடு பிரிவின்றி நின்ற சிவன் சுத்தநிலையில் பிரிந்து தோன்றி அனைத்தையும் அவ்வுயிர்க்குச் சிவ சொருபமாகக் காட்டி இவையெல்லாம் தானல்ல என்னும் உண்மையை அவ்வுயிர்க்குஉணர்த்தி நிராதாரனாய்த் தோன்றி அருளுவான்' என்பது சிவஞான சித்தியாரின் கருத்துரையாகும்.

குருஞானசம்பந்தர் இச்சிவஞான சித்தியாரில் உண்மை ஞானம் பெறவிரும்புவோர் இத்தகைய நிலையை அடைய வேண்டுமெனக் கூறலைச் சிவபோகசாரப் பாடலின் கருத்தாகக் கொள்ளல் வேண்டும்.

சாத்திரக் கருத்து :

" முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் — ஒத்த
இரதமணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என் றோதும் விதி "

என்ற சாத்திரப் பொருளை,

" இந்தனத்தில் அங்கி எரியுறுநீர் தேன்இரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண் — சந்ததமும்
அத்துவிதம் ஆவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை "

என்ற இச்சிவபோகசார வெண்பாவில் உணர்த்தக் காண்கின்றோம்.

" என்னை அறிவென்றான்; என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான்; சந்ததமும் — என்னைஉன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான்; இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம் "

" எங்கும் இருக்கும் அறிவுநீ; ஏகமாய்
அங்கங் குணர்த்தும் அறிவுநாம்; — பொங்கும்
மலம்மறைத்தல்; மாயை மயக்கல்; விகாரப்
பலமனைத்தும் கன்மமலம்; பார் "

என்ற பாடல்கள் முப்பொருள் இயல்புகளைத் தெளிவுற விளக்குவன.

"வெள்ளத்துள் நாவற்றியாங்கு" என்ற திருவாசகத்தை நினைப்பிக்கும்முறையில், "ஈசனடியில் இருக்கையிலே எங்கெங்கும், ஈசனடி தேடி இளைத்தேனே" என்று அருளிய பகுதி நம்மனோர் அறிந்து பயன்கொளற்பாலது.

"புசிப்போம் சிவபோகம்; பூரணமாய் எங்கும்
வசிப்போம்; உலகில் வசியோம்; — முசிப்பின்றி
வாழ்வோம்; சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோம் எமக்கார் சரி"

என்னும் அரிய வெண்பா, இவர்களது சிவானுபூதிச் சிறப்பைத் தெள்ளத்தெளிய விளக்குகின்றது. இங்ஙனம் அனுபூதியில் திளைத்து நின்ற இவர்கள் ஐயன் அருளையன்றி வேறு செயலற்றிருந்தமையை,

"எங்கே நடத்துமோ, எங்கே கிடத்துமோ
எங்கே இருத்துமோ என்றறியேன் — கங்கைமதி
சூடினன், தில்லையிலே தொந்தொமென நின்றுநட
மாடினன் எங்கோன் அருள்"

என்ற வெண்பாவால் அறிகின்றோம். இங்ஙனம் திருவருள் வெள்ளத்திலே திளைத்துச் செயலற்றிருந்த இவர்கள், நம்மனோர்க்குச் செய்யும் உபதேசங்களைத் தங்கள் நெஞ்சை நோக்கிச் சொல்வனவாக அருளிச்செய்கின்ற முறை அறிந்து மகிழத்தக்கது;

"ஊட்டும் வினைஇருந்தால், உன்ஆணை, உன்பதத்தைப்
பூட்டிப் பிடித்துப் புசிப்பிக்கும் — கேட்டுத்
திரியாதே; வந்துதில்லைத் தெய்வமே என்றென்(று)
எரியாதே; நெஞ்சே இரு"

"பரபரக்க வேண்டா; பலகாலுஞ் சொன்னேன்;
வரவரக்கண் டாராய் மனமே! — ஒருவருக்கும்
தீங்கு நினையாதே, செய்நன்றி குன்றுதே;
ஏங்கி இளையா திரு"

என்ற பாடல்கள் நம் மன அமைதிக்கு உதவும் பாடல்களாக விளங்குவன.

இவர்கள் இந்நூலின்கண் முடிவாக அனைவர்க்கும் அருளிச்செய்தது திருமுறைப்பாராயணமும், திருக்கோயில் வழிபாடுமே. அவ்விரு வெண்பாக்களும் என்றும், யாவரும் நினைக்கற்பாலன.

"ஆசையறுய்; பாசம்விடாய்; ஆனசிவ பூசைபண்ணுய்;
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய்; திருமுறைகள் ஓதாய்;
மனமே உனக்கென்ன வாய்."

இவ்வரிய சாத்திர நூலை ஓதி, உணர்ந்து, உளங்கொள்வார் உண்மை ஞானத்தை உற்று அனுபூதி நிலையை அடைதல் ஒருதலை. இந்நூற்கு அகல உரை ஒன்று எழுதப்பட்டு ஆதீன வெளியீடாக வெளிவந்திருத்தலால், அதுகொண்டு இதன் பொருளைத் தெளிய உணரலாகும்.

உ

சிவமயம்

மாசி மாதச் சிறப்பு நாட்கள்

13—2—88	சனி, விஷ்ணுபதி புண்ணியகாலம், திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம், கும்பரவி 7-55.
15—2—88	திங்கள், சோமப் பிரதோஷம்.
16—2—88	செவ்வாய், கிருஷ்ண அங்காரக சதுர்த்தி, மகாசிவராத்திரி, துவாபரயுகாதி, மயிலாடுதுறை ஸ்ரீ காசி விசுவநாதருக்கு மகாபிஷேகம், சீகாழியில் மூன்றும் காலத்தில் ஸ்ரீ உமா மகேசுவரருக்குப் புழுகாப்பு. திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேசுவரசுவாமிக்கு 4 ஆவது காலத்தில் தாழம்பூ மாலை அணிவித்தல்.
17—2—88	புதன், சர்வ அமாவாசை.
18—2—88	வியாழன், ஸ்ரீ கோச்செங்கட்சோழ நாயனர் குருபூஜை.
22—2—88	திங்கள், மாசிமக உற்சவ ஆரம்பம்.
24—2—88	புதன், கிருத்திகை விரதம், வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ ஷண்முகருக்கு அபிஷேகம்.
29—2—88	திங்கள், சோம பிரதோஷம். வேளூரில் மூன்று தினங்கள் சூரிய பூஜை ஆரம்பம்.
1—3—88	செவ்வாய், ஆமில்ய விழா.
2—3—88	புதன், மாசிமகம், திருவையாறு, கும்பகோணம், கஞ்சனூர், காஞ்சீபுரம் முதலிய தலங்களில் மக உற்சவ தீர்த்தம். திருக்குவளை நெல் மகோற்சவம், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கும், திருக்குறுக்கை ஸ்ரீ காமதகனமூர்த்திக்கும் அபிஷேகம். திருக்குறுக்கை ஸ்ரீ ஞானாம்பிகா உடனுகிய ஸ்ரீ காமதகனமூர்த்தி யுடன் ஸ்ரீ பஞ்சமூர்த்திகளும் புறப்பாடு.
3—3—88	வியாழன், பௌர்ணமி விரத பூஜையில் கிருஷ்ண கம்பளம் சாத்துதல், காமதகனம், ஹோலிப் பண்டிகை, சந்திர கிரஹணம்.
6—3—88	ஞாயிறு, வேளூர் ஸ்ரீ சந்திரசேகர உற்சவ ஆரம்பம். ஸ்ரீ எறிபத்த நாயனர் குருபூஜை.
7—3—88	திங்கள், சங்கடஹரசதுர்த்தி. தருமை ஆதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருபூஜை.
11—3—88	வெள்ளி, காளாஷ்டமி.
13—3—88	ஞாயிறு, காரடையான் நோன்பு. மீனரவி 56 - 19. ஸ்ரீ காரி நாயனர் குருபூஜை.

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடுகள்

1. ஆசௌச தீபிகை

தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியாருள் ஒருவராகிய ஸ்ரீ தமிழாகர முனிவர் இயற்றியது. உலக வாழ்வில் சமய நெறி கடைப்பிடித்து ஒழுகுவோருக்குப் பிறப்பு, இறப்புக்களால் வரும் தீட்டுக்களைப் போக்கிப் கொள்ளுதற்கு உரிய விதி முறைகளைக் கூறுவது. ஆகமங்களில் கூறும் ஆசௌச பிராயச்சித்தங்களைத் தொகுத்துத் தமிழில் கூறுவது. இனிய செய்யுள் நூல். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பதினாறும் ஆண்டுக் குருபூஜை விழா மலராக வெளியிடப்பெற்றுள்ளது.

அளவு:- டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 64.
அடக்க விலை ... . ரூ. 1—50
அஞ்சல் செலவு (நூல்அஞ்சல்) காசுகள். 0—60

2. சைவாநுட்டான விதி

சைவ மெய்யன்பர்கள் விரும்பிக் கடைப்பிடித்தற்கு உரிய சைவ அநுட்டானவிதி நூல் வடிவாக மலர்ந்துள்ளது. மந்திரம் வேறு கிரியை வேறாக எளிய நடையில் சுலபமாக அறிந்துகொள்ளும் வண்ணம் பத்தர்கட்குச் சிறிதும் மாறுபாடுஇன்றி எழுதப்பெற்றது. தருமை ஆதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாமலராக ஐந்தாம் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது.

அளவு:- டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 28.
அடக்க விலை .... ரூ. 1—40
அஞ்சல் செலவு (நூல் அஞ்சல்) காசுகள். 0—40

செயலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம், தருமபுரம்,
மயிலாடுதுறை - 609001, தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press. Dharmapuram, Mayiladuthurai 10—2 -88.